

# இலக்கு

இதழ் 63

வாராந்த மின்னிதழ்

பெப்ரவரி 02, 2020

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1



## தமிழ் கட்சிளை ஒருங்கிணைப்பது சாத்தியமில்லை

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எட்வேட் பபிலராஜ்

## இலங்கையில் தமிழர் கல்வியின் நிலை

அ. ஸ்ரீஸ்கந்தராஜா






## கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் மக்கள்...!

கோ- ரூபகாந்


## அவுஸ்திரேலியாவின் தேசிய நாள் பூர்வகுடிகளுக்கு படையெடுப்பு நாள்

தமிழில் ந.மாலதி



## உலகை கதிகலங்க வைக்கும் புதிய கொரோனா வைரசு

விக்கிரமன்




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# அமெரிக்க அதிபரின் மத்திய கிழக்கிற்கான அமைதித் திட்டம்: இஸ்ரேலின் இறையாண்மைக்குள் சென்றது பாலஸ்தீனம்




கடந்த செவ்வாய்க்கிழமை(28) அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மத்திய கிழக்கிற்கான அமைதித் திட்டத்தை அறிவித்தார். அவர் அறிவித்த திட்டம் அவர் கையில் இருந்த காகிதத்தைவிட பெறுமதியற்றது.

தனது கையில் இருந்த காகிதத்தில் காணப்பட்ட எழுத்துப் பிழைகளையும் ட்ரம்ப் கவனிக்கவில்லை என்பது அவருக்கு மத்திய கிழக்குத் தொடர்பில் எந்த அறிவும் இல்லை என்பதைக் காட்டுகின்றது என தெரிவிக்கின்றனர் ஆய்வாளர்கள். இந்த அறிவிப்பின் பிரதான நோக்கம் ட்ரம்ப் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியவர்களின் அரசியல் பலத்தை அதிகரிப்பதே ஆகும்.

எதுவுமற்ற இந்த அமைதித் திட்டத்தின் பிரதான நோக்கம் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதிகளை சட்டபூர்வமாக இஸ்ரேலுக்கு மாற்றுவதே. இது ஒரு இறந்த திட்டம் என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

5மில்லியன் பாலஸ்தீன அகதிகளுக்கு ஐ.நா. ஊடாக வழங்கப்படும் 360 மில்லியன் நிதியையும் அமெரிக்கா நிறுத்தியுள்ளது. ஆனால் அமெரிக்காவின் இந்தத் திட்டத்திற்கு எந்த ஒரு பாலஸ்தீன மக்களும் ஆதரவு தரவில்லை என்பதுடன், மேற்குலக ஆதரவு அரபு நாடுகள் அமைதித் திட்டத்தை வரவேற்ற போதிலும் திட்டத்தின் நோக்கத்தை ஆதரிக்கவில்லை. துருக்கியும் ஈரானும் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

பாலஸ்தீன பிரதமர் மகமூட் அப்பாஸ் இந்தத் திட்டத்தை எதிர்த்ததுடன், ஜெருசலேத்தையோ எமது உரிமைகளையோ யாரும் விற்க முடியாது என தெரிவித்துள்ளார்.

அதாவது பாலஸ்தீன மக்களிடம் எஞ்சியுள்ள நிலத்தையும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்க முற்பட்டுள்ளது. 1971ஆம் ஆண்டு பிரித்தானியா மேற்கொண்டது போன்ற ஒரு செயல் இது. 1947ஆம் ஆண்டு பாரபட்சமாக நடந்து கொண்ட ஐ.நா. 30சதவீத மக்கள் தொகையைக் கொண்ட இஸ்ரேலுக்கு 55சதவீத நிலத்தையும் 67சதவீதம் கொண்ட பாலஸ்தீன மக்களுக்கு 45சதவீத நிலத்தையும் வழங்கியிருந்தது.

ஆனால் தற்போதைய அமெரிக்காவின் திட்டம் 15சதவீத நிலத்தையே பாலஸ்தீன மக்களுக்கு வழங்கியுள்ளதுடன், 85சதவீத பாலஸ்தீனப் பிரதேசம் இஸ்ரேலின் இறையாண்மையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. ஜெருசலேம் இஸ்ரேலின் பிரிக்க முடியாத தலைநகரம் என்று 2017ஆம் ஆண்டு அமெரிக்கா அங்கீகரித்திருந்தது.

அமெரிக்காவின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு பாலஸ்தீன பிரதமருக்கு அழுத்தம் கொடுத்து வரும் சவுதி அரேபியா, ஜெருசலேமிற்குப் பதிலாக அபு டிஸ் என்னும் அருகில் உள்ள நகரத்தை தலைநகரமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளது.

அமெரிக்காவின் திட்டம் என்பது அனைத்துலக விதிகள், ஐ.நா.தீர்மானங்கள், நீதிமன்ற உத்தரவுகள் எல்லாவற்றையும் புறந்தள்ளியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். பாலஸ்தீனத்தின் நண்பன் என்று கூறும் சிறிலங்கா அமெரிக்காவின் திட்டத்தை ஆதரிக்குமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறியது
# மக்கள் கொண்டாட்டம்




ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை(31) பிரித்தானியா வெளியேறியுள்ளது. கடந்த 47 வருடங்களாக ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகவும் முக்கிய பங்கு வகித்த பிரித்தானியா அதில் இருந்து வெளியேறியது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பாரிய பின்னடைவாக கருதப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியது எமக்கு பாதகமாக இருக்கலாம். ஆனால் நாம் அதனை முறியடித்து வெற்றி யீட்டுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இது முடிவல்ல ஆரம்பம் என வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் பிரித்தானியா உத்தியோக பூர்வமாக வெளியேறிய பின்னர் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இந்த வெளியேற்றத்தை கொண்டாடும் விதமாக பிரதமர் அலுவலகமாக டவுணிக் வீதியில் அலங்கார விளக்குகள் எரியவிடப்பட்டதுடன், 50 பென்ஸ் நாணயமும் வெளியிடப்பட்டுள்ளது.

பெருமளவான மக்கள் பல இடங்களில் இந்த நிகழ்வைக் கொண்டாடியதுடன், சில இடங்களில் பட்டாசுகளும் வெடிக்க வைப்பட்டன.



அதேசமயம், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா பிரிந்து செல்வதை எதிர்ப்பவர்கள் ஐரோப்பிய ஒன்றியக் கொடியுடன் பேரணி ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

இதனிடையே பிரசல்ஸ் இல் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவல கங்களில் இருந்த பிரித்தானியா கொடி அகற்றப்பட்டு அது அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## முகமூடிகளுடன் கொண்டாடப்படவுள்ள சிறீலங்காவின் சுதந்திர தினம்



சிறீலங்காவின் நட்பு நாடான சீனாவில் உருவாகிய கொரோனா வைரஸ் சிறீலங்காவிலும் அதிகமாக பரவி வருவதால் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெறவுள்ள 72ஆவது சுதந்திர தினத்தை முகமூடிகளுடன் கொண்டாட சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

நிகழ்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டவர்களுக்கும், கலந்து கொள்ளும் மக்களுக்கும் முகமூடிகளை வழங்கவுள்ளதாக சிறீலங்காவின் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கே. ஜி. தர்மதிலகா தெரிவித்துள்ளார்.

கையை சுத்தம் செய்யும் திரவங்களும், அதிகளவு நீரும் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்கள் கொண்டாடும் இந்த சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் புறக்கணித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவின் சுதந்திர தினத்தில் காணாமல் போனவர்களை நினைவுகூரும் நிகழ்வு




சிறீலங்காவின்72ஆவது சுதந்திர தினத்தில் சிறீலங்கா அரசினாலும் அதன் படையினராலும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை நினைவுகூரும் நிகழ்வு ஒன்றை வடபகுதியில் மேற்கொள்ளவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட காணாமல் போனோர் அமைப்பு தெரிவித் துள்ளது.

இதனிடையே. காணாமல் போனவர்கள் தொடர்பில் சிறீலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அனைத்துலக சமூகம் அதற்கான அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்து வவுனியா மாவட்ட காணாமல் போனோர் அமைப்பு மேற்கொண்டு வரும் தொடர் போராட்டம் நேற்றுடன் (01) 1078 நாட்களை கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வடபகுதி இளைஞர்களின் எதிர் காலத்தை அழிக்கும் கேரளத்து கஞ்சா



இந்தியாவின் தென் மாநிலமான கேரளாவில் இருந்து கடத்தி வரப்படும் கஞ்சா என்ற போதைப் பொருள் வடபகுதியில் உள்ள தமிழ் இளைஞர்களின் எதிர்காலத்தை சீரழிப்பதாக யாழ். தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இனிப்பு வகையான பொருட்களுடன் பெரிய பை ஒன்றில் கஞ்சாவை கொண்டு சென்ற மாணவன் யாழ் பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டார். ஆனால் பாடசாலையின் பெயர் பாதிக்கப்படும் என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மெதம்பிரமைன் என்ற இராசாயனப் பெயர் கொண்ட போதைப் பொருள், கஞ்சா, மற்றும் பீடி இலைகள் என்பன கேரளம், மற்றும் பாகிஸ்தான் ஆகிய பகுதிகளில் இருந்து வடபகுதிக்கு கொண்டு வரப்படுகின்றன.

பாடசலை சிறுவர்களிடம் இந்த போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும், ஆனால் அதனை தடுக்க சிறீலங்கா காவல்துறை நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் யாழ் செயலகத்தின் சிறுவர் உதவி பிரிவின் அதிகாரி ஏ. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

அரியாலை பகுதியே போதைப் பொருள் கடத்தப்படுவதன் தலைமையகமாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு 3500 கிலோ கேரள கஞ்சா, 739 கிலோ கெரோயின், 8 கிலோ உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கஞ்சா, 42000 கிலோ பீடி இலைகள் என்பன கைப்பற்றப்பட்டதாக சிறீலங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏறத்தாள 7000 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் தொழிலில் ஈடுபடும் கடலில் தேடுதல் நடத்துவது கடினம் என சிறீலங்கா கடற்படை தெரிவித்துள்ளது. ஆழ்கடல் பகுதிக்கு கொண்டு வரப்படும் போதைப் பொருட்கள் பணப் பரிமாற்றம் இடம்பெறும் வரை அங்கு மறைத்து வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, போதைப்பொருள் பாவனைக்கு எதிராக குரல் கொடுப்பவர்களும் யாழில் தாக்கப்படுகின்றனர்.

நம்பிக்கை இல்லம் என்ற புனர்வாழ்வு நிலையத்தை நடத்தி வரும் வின்சன் பற்றிக் அடிகளார் அவர்களை கடந்த செப்ரம்பர் மாதம் 23ஆம் நாள் கடத்திச் சென்ற இருவர் ஏன் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக குரல் கொடுக்கின்றீர்கள் எனக் கேட்டு பலமாக தாக்கிய பின்னர் அவரை இராசாவின் தோட்ட வீதியில் விட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த வருடம் யாழ். பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் போதைப் பொருள் பயன்படுத்துவதை கண்டறிந்த ஆசிரியர் அதனை தடுக்க முற்பட்ட போது மாணவர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். எனினும், பாடசாலையின் தரம் கருதி அதனை நிர்வாகம் மறைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று(02) காலையும் யாழ். மாவட்டத்தின் புங்குடுதீவு பகுதியில் 300 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகு ஒன்றில் மறைத்து வைத்து கடத்தப்பட்ட போதே இது கண்டறியப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் படகில் வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இருவர் சங்குப்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

# மாற்று வழி என்ன உள்ளது?

சிறீலங்காவின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்த ஒரு கருத்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் குறித்து மீண்டும் சர்ச்சை ஒன்றை உருவாக்கியிருக்கின்றது. பொறுப்பான பதவி ஒன்றில் இருப்பவர், ஏற்கனவே மற்றொரு பொறுப்பான பதவியில் இருந்தவர் பொறுப்பற்ற வகையில் பதிலளித்திருப்பது மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்களுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அத்துடன், பொறுப்பு கூறல் பொறி முறை எதனையும் அவர் ஏற்கப் போவதுமில்லை. நடைமுறைப்படுத்தப் போவதுமில்லை என்பதையும் இது உறுதிப்படுத்தியிருக்கின்றது. இதனால் மாற்று வழி ஒன்றைத் தேடிச் செல்ல வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

போரின் இறுதிக் காலகட்டத்தில் அல்லது போர் முடிவடைந்த பின்னர் சிறிலங்கா படையினரிடம் சரணடைந்து அல்லது கைது செய்யப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் இப்போது உயிருடன் இல்லை என்ற சிறீலங்கா அரசாங்க தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் கருத்தே இப்போது சர்ச்சைக்குரியதாக இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது கூட இதேபோன்ற ஒரு கருத்தை முன்வைத்திருந்தார். தமிழ் மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் பொறுப்பற்ற வகையில் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் குறித்து பெரும்பாலான தமிழ்த் தலைமைகள் கூட மௌனமாகத்தான் இருக்கின்றன.

2009இல் தமிழின அழிப்புப் போர் இடம் பெற்றபோது சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகளுக்கு கண்காணிப்பாளராக இருந்தவர் என்பதுடன், பாதுகாப்பு அமைச்சின் நிரந்தர செயலாளராகவும் கோட்டாபய ராஜபக்சவே கடமையாற்றினார். அந்தவகையில் அப்போது இடம்பெற்ற நிகழ்வுகள் அனைத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய ஒருவராக அவர் இருக்கின்றார். அதற்கு மேலாக இப்போது சிறிலங்கா நாட்டின் அதிபராகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருக்கும் ஒருவர் பொறுப்பற்ற விதத்தில் சொல்லியிருக்கின்ற பதில், ஐக்கிய நாடுகள் சபையின் நடைமுறைகளையும், சர்வதேச மனிதாபிமான சட்டங்களையும் ஏற்றுக் கொள்வதற்கு அவர் தயாராக இல்லை என்பதைத் தெளிவாக புலப்படுத்தியிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிருடன் இல்லை என்பதை கோட்டாபய ராஜபக்ச அறிவித்திருப்பது தானும் சிறீலங்கா அரசும் பன்நாட்டு சட்டத்தை மோசமாக மீறியுள்ளோம் என்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சமனானது என மனித உரிமை அமைப்புகள் சுட்டிக் காட்டுகின்றன. காணாமல் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட செயலகம் கூட அதிகாரம் அற்றதாகவும், சிறப்பான முறையில் செயற்படாத ஒன்றாகவுமே இருந்துள்ளது. சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கான ஒரு நாடகமாக மட்டுமே இந்தச் செயலகம் இருந்துள்ளது என்பதையும் கோட்டாபய ராஜபக்சவின் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

காணாமல் போனோர் விவகாரத்தில் சிறீலங்கா அரசாங்கம் ஆக்கபூர்வமாக எதனையுமே செய்யப் போவதில்லை என்பது கடந்த காலத்திலேயே வெளிப்படையாகதெரிந்தது. இப்போது சிங்கள பௌத்த மக்களின் ஆதரவுடன் அதிகாரத்திற்கு வந்திருக்கும் கோட்டாபய முழு அளவில் அவர்களுடைய நலன்களையே முன்னிலைப்படுத்தும் ஒருவராக காணப்படுகின்றார். அதனால், இந்த விவகாரத்தில் எந்த முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. அதனால் மனித உரிமை அமைப்புக்களும் சர்வதேச சமூகமும் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஏதாவது ஏற்படக் கூடிய வகையில் மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இன்றைய அவசரமும் அவசியமும் ஆகும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 43ஆவது கூட்டத் தொடர் இம்மாத இறுதியில் ஜெனீவாவில் ஆரம்பமாக உள்ள நிலைமையில், இதற்கான தேவையும் முன்னரை விட அதிகமாக உள்ளது என்பதை சொல்லி வைக்க விரும்புகிறோம். மனித உரிமை அமைப்புக்கள் இதற்கான தயாரிப்புக்களை இப்போதே ஆரம்பிக்கா விட்டால், சிறிலங்கா அரசாங்கம் வழமை போல சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான உபாயங்களுடன் களமிறங்கும். அதற்கான மாற்று வழிகள் குறித்து ஆராய்ந்து அதற்கான உறுதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமாக மட்டுமே தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

*- ஆசிரியர்*



# இலங்கையில் தமிழர் கல்வியின் நிலை

**அ. ஸ்ரீஸ்கந்தராஜா**

இலங்கையில் ஒரு நூற்றாண்டு கால தமிழர் கல்வியை ஆராய்ந்து பார்த்தால், கல்வியின் போக்கானது எல்லாச் சமூக மட்டங்களிலும் பரவி, சமூகப் பிரிவினையை மாற்றி, எல்லா மட்டத்திலும் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற் கான காரணியாகத் திகழ்ந்துள்ளது. தமிழர் சமுதாய மானது கல்விக்கு முன்னுரிமை காட்டுகின்ற இயல்பைக் கொண்டதாகையால், சமூக ஏற்றத் தாழ்வுகளை ஊடறுத்து கல்வியானது அனைத்து தரப்பினரையும் சென்று சேர்ந்து சமத்துவத்தை நோக்கிய நிலைக்கு பங்களிப்புச் செய்கின்றது. இது இன்றைய அறிவுசார் தொழில்நுட்ப யுகத் திலே இலகுவானதாகவும் வேகமானதாகவும் அமையப் பெறுகின்றது.

### ஆங்கிலேயரின் காலம்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் கால ங்களிலும், அதற்கு முந்தைய காலத்தில் காணப் பட்ட தமிழரின் மரபுவழிக் கல்வி முறையிலும், கல்வி வாய்ப்புக்கள் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்குச் சார்பானதாகவே இருந்தது. அனாலும், ஆங்கிலே யர் காலத்தில் கல்விக்கான வாய்ப்புகள் பரந்துபட் டதாகவே காணப்பட்டது. அவர்களது சமய நிறுவனங்கள் கல்வியை வழங்குவதில் பெரி தும் ஈடுபட்டன. தமது சமயத்தை வளர்க்கும் நோக்கம் அவர்களுக்குப் பிரதான காரணமாக இருந்தது. அவர்களது அரசாங்கம் இச்சமய நிறுவனங் களுக்கு பெரிதும் உதவியது. இது இந்து சமயத்தில் ஏற்படுத்திய பின்னடைவான நிலையின் காரண மாக இந்து சமயம் சார்பான ஒரு எழுச்சிக்கும் அதன் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டது.

இக்காலத்திலேயே ஆங்கில மொழி மூல மான கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டு அத ற்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கத் தொழில் பெற்று, பொருளாதாரத்தில் உயர்ச்சி பெறுவதற்கு ஆங்கில மொழிக் கல்வி உதவியாக இருந்தது. ஆங்கில மொழியில் கற்ப தற்குப் போட்டியும் நிலவியது. ஆங்கில மொழிக் கல்வி மத்திய மற்றும் உயர்தர வகுப்பினருக்கு வாய்ப்பாக இருந்தது. வசதி படைத்தவர்கள் ஆங்கிலத்தில் தரமான ஆரம்பக் கல்வியையும் பெற்றார்கள்.

சுயமொழிக் கல்வியானது அவர்களது சமய வளர்ச்சிக்கு பக்கபலமாக அமையும் என்கின்ற கொள்கைக்கு அமைவாக சுயமொழிக் கல்விக்கும் ஆங்கிலேயர் ஆதரவு வழங்கினார்கள். ஆனால் வசதி குறைந்த பாமர மக்களே சுயமொழியில் தரம் குறைந்த ஆரம்பக் கல்வியைப் பெற்றார்கள். 1929இன் நிலவரப்படி இலங்கையில் ஏறத்தாழ 5000 பாடசாலைகள் மொத்தமாகக் காணப்பட்டன. இதில், 18%மானவையே ஆங்கில மொழிமூலப் பாடசாலைகள் ஆகும். ஏனைய மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் சுயமொழிப் பாடசாலை களே ஆகும். இருப்பி னும் சுயமொழி மூலமான கல்வியின் மூலம் பொருளாதாரம், உயர் பதவியினைப் பெற முடி யாது என்ற எண்ணம் அன்றும் இருந்தது. ஆங்கிலக் கல்வியின் மோகம் அதிகரித்து, வீடுகளில் ஆங்கிலம் பேசும் மொழியாகவும், சுயமொழியானது வீடுகளில் பணிபுரியும் வேலையாட்களுடன் தொடர்பாடவுமே பயன்பட்டது. எனவே எல்லோ ருக்கும் தரமான கல்வி கிடைக்கப் பெறாமல் சமூக பொருளாதார சமத்துவமின்மையை உரு வாக்கியிருந்தது.

19ஆம் நூற்றாண்டிலே உயர்கல்வி வாய்ப்பு க்கள் பிரித்தானியாவிலே தோன்றியிருந்தது. அது குடியேற்ற நாடாகிய இலங்கையிலும் மூன்றாம் நிலைக் கல்விக்கு வழிகோலியிருந்தது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பட்டப்படிப்பு நெறி காணப்பட்டதும், ஆங்கில மருத்துவப் படி ப்பு யாழ்ப்பாணம் மானிப்பாயில் கிரீன் ஞாப கார்த்த(Green Memorial) வைத்தியசாலையில் வழங்கியதையும் உதாரணமாகக் குறிப்பிட லாம். இலங்கையில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்ட 1942ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மாண வர்கள் திறமைச் சித்தி மூலம் அதிக அனுமதி யைப் பெற்றார்கள். அவ்வாண்டின் மொத்த மாணவர் தொகையில் 32% மாணவர்கள் தமிழ் மாணவர்களாகவே காணப்பட்டார்கள். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னரான காலகட்டத்தில் இத் தொகையானது குறைந்து சென்றுள்ளது.



ஆங்கிலேயரின் வெளியேற்றத்துக்குச் சற்று முன்னதாக, 1945இல் இலவசக் கல்வி முறை நடைமுறைக்கு வந்தது. இது வசதி குறைந்தோரும் ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்கு உதவியது. அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் தாய் மொழிக் கல்வி எல்லா ஆரம்ப வகுப்புகளுக்கும் கட்டாய மாக்கப்பட்டது. ஆங்கிலமானது மூன்றாம் வகுப் பில் இருந்து கட்டாய இரண்டாம் மொழிப் பாடமாக்கப்பட்டது. எனவே இலங்கை ஆங்கி லேய ஆட்சியில் இருந்து விடுபடுவதற்கு முன்ன தாக, தமிழர் கல்வியில் ஆங்கிலம் சேர்ந்து கொண் டதானது எதிர்காலத்தை நோக்கிய கல்விப் பரி மாணத்தில் ஒரு சிறந்த விடயமாகவும், இந்து சமயம் சார்ந்த எழுச்சி உருவானது, தமிழர்களின் மொழி, சமய மற்றும் கலாச்சாரத்தின் பற்று றிதியையும் காட்டுகின்றது.

### ஆங்கிலேயருக்குப் பிற்பட்ட காலம்

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் 1953ஆம் ஆண்டு தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் தாய்மொழிக் கல்வியானது ஆறாம் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும் 1960ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் கொண்டு வரப்பட்ட மதசார்புடைய கல்வி நிறு வனங்கள் யாவும் அரசுடமையாக்கப்பட்டது. இது இலவசமான அரச கல்வியை அனைவரும் பெறுவதற்கான வசதியைப் பெற்றுக் கொடுத்தது. மாணவர்களின் பாடசாலைத் தேவையினை நிறைவுசெய்யும் நோக்குடன் 1964இன் வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் பாடசாலைகள் அமைப்பதற்கான வழிகாட்டல் தோன்றியது. இதன் பிரகாரம், இரண்டு மைல்கள் சுற்றளவில் உள்ள மாணவர்களுக்கு ஒரு ஆரம்பப் பாடசாலை எனும் அடிப்படையில், பாடசாலைகள் உருவாக் கப்பட்டன. இலவசக் கல்வி, தாய் மொழிக் கல்வி, பொருத்தமான கல்விக் கொள்கை மற் றும் பாடசாலைகளின் அதிகரிப்பு என்பன பாட சாலைகளில் மாணவர்கள் அதிகமாக இணைந்து கொள்ள உதவிய காரணிகளாகக் கொள்ளலாம். இந்நிலைமை தமிழ் மாணவர்களுக்கும் அதிக எண்ணிக்கையில் கல்வியைப் பெற்றுக் கொள் வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கியது என்று கூறலாம்.

தமிழர்களின் பல்கலைக்கழகக் கல் வியை பொறுத்தவரையில், யாழ்ப்பாண மாவட் டத்திலிருந்தே அதிகளவான மாணவர்கள் அனு மதி பெறுகின்றார்கள். மலையகத்தில் இது மிகவும் குறைவு. பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக் கப்பட்ட காலத்தில் இருந்து மாணவர்கள் திறமைச் சித்தியில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்ப டையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இது அதிகளவான தமிழ் மாணவர்கள் அனுமதி பெறும் வாய்ப்பை உருவாக்கி இருந்தது, குறிப்பாக விஞ் ஞான அடிப்படையிலான போதனைப் பீடங்க ளுக்கு அதிக தமிழ் மாணவர்களின் அனுமதி யானது, இன விகிதாசாரத்திலும் பார்க்க அதிக மாகக் காணப்பட்டமையினால் 1971இல் மொழி அடிப்படையிலான தரப்படுத்தலும், 1977இல் மாவட்ட பங்கீட்டு முறைமையும் கொண்டு வரப் பட்டு தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைக் கப்பட்டது. இது திறமைச் சித்தி பெற்றும் உயர் கல்வியைத் தவற விட்ட மாணவர்களிடையே விரக்தியை ஏற்படுத்தியிருந்தது. பின்வரும் நாட் களில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைக்கு இதுவும் ஒரு காரணியாக அமையப் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை.

இங்கே கவனிக்க வேண்டிய விடையம் யாதெனில், மத்திய ஆட்சியாளர்களின் கைகளிலே உள்ள கல்விக் கொள்கையானது தேவைக்கு ஏற்ற வாறு உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் அதிகாரமளிக்கின்றது. அதன் மூலமாக பிரதேச எதிர்பார்ப்பை உள்வாங்கிக் கொள்ள முடியாது. மாறாக, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆறு முக நாவலரால் இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத் துவதற்கு இந்துப் பாடசாலைகளை உருவாக்க முடிந்துள்ளது, அவற்றினை நிர்வகிக்க சபையும் அரச ஆதரவுடன் உருவாக்க முடிந் துள்ளது. அதாவது பிரதேச ரீதியில் கல்விக் கொள்கை வகுக் கவும் நடைமுறைப்படுத்தவும் முடிந்துள்ளது என்பதையே அது காட்டுகின்றது.

தொடரும்..............



# கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் மக்கள்...!

கோ- ரூபகாந்

**வ**வுனியாவிலிருந்து 22 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதி. இங்கு 9 குடும்பங்களைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வருகிறார்கள்.

உலகம் நாகரீகத்தின் உச்சியை தொட்டுக் கொண்டிருக்கும் நிலையில் கள்ளிக்குளத்தின் காட்டுப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் மக்களின் நிலைமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 30 வருட காலமாக இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் "காற்றில் அகப்பட்ட பஞ்சு போல்" வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை அதிகளவில் பாதித்ததுடன் அவர்களைப் பல வருடங்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டுப் பல்வேறு பகுதிகளுக்கு துரத்தியிருந்தது.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்த அம்மக்கள் யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 11 வருடங்கள் கடந்து விட்ட நிலையில், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மீள்குடியேற்றம் என்பது கிள்ளித் தெளிக்கும் நடவடிக்கையாகவே இருப்பதாகச் சந்தேகம் கொள்ள வைக்கிறது. கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் குடியிருக்கும் இளம் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுடன் அடிப்படை வசதிகள் ஏதுமின்றியும் குடிப்பதற்கு நீரின்றியும் பெரும் துன்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

காட்டு யானைகள், கரடி மற்றும் பாம்பு போன்ற விலங்குகளின் தொல்லைக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இரவில் ஒன்றாக ஓர் இடத்தில் கூடி உறங்குகிறார்கள். பகலில் தங்கள் கொட்டில்களில் உணவு தயாரித்து உண்கிறார்கள். தங்கள் வீடுகளைக் கற்களாலும் களிமண்ணாலும் அமைத்திருக்கும் மக்கள், இந்த நாகரீக உலகத்தை விட்டு வெகு தூரத்தில் இருக்கிறார்கள்.

வவுனியாவில் மீள்குடியேற்றம் என்ற பெயரில் வீட்டுத் திட்டங்களில் அதிகார துஸ்பிரயோகம் செய்யப்பட்டுப் பல வீடுகள் இன்றும் கட்டப்பட்ட நிலையில் காடுவத்தி வௌவால்களும் குரங்குகளும் வாழ்ந்து வரும் நிலையில் உண்மையில் வீடு தேவைப்படும் மக்கள் காடுகளுக்குள் துரத்தப்பட்டுள்ளனர்.

நல்லாட்சி அரசு உருவாகி மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்காகவே தனி அமைச்சும் உருவாக்கப்பட்டு வடக்கு மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் நிலைமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் கொடுமையால் பல இடங்களிலிருந்து அகதிகளாக வந்த மக்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்து கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் குடியேறிய பின் அரச அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் சென்று தங்கள் நிலைமையைத் தெரிவித்தும் இன்னும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதோடு எங்களை அவர்கள் மனிதர்களாகவே மதிக்கவில்லையென கவலையும் வெளியிட்டனர்.

கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் குடியிருக்கும் மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களின் நிலைமையை கேட்டறிந்த போது எஸ். குகதாசன் கருத்துத் தெரிவிக்கையில், நுவரெலியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நான், வவுனியாவில் திருமணம் முடித்துள்ளேன். இருப்பதற்கு ஒரு வீடு இல்லாத காரணத்தினால் இந்தக் காட்டுப் பகுதிக்குக் குடிவந்தோம். நாங்கள் அதிகாரிகளிடம் எழுத்து மூலமாக உதவிகளைக் கோரியிருந்த போதும் அவர்கள் எங்களைக் கண்டு கொள்ளவில்லை. அதன் காரணமாகப் பெரும் பாதிப்பை அனுபவித்து வருகிறோம். அடிப்படை வசதிகள் இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறோம். யானைகளின் தொல்லை, கரடித் தொல்லையின் மத்தியில் எங்கள் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. நாங்கள் வேலைக்குச் சென்ற பின் எங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் இந்தக் காட்டில் தனியாகவே இருக்கின்றனர். தினமும் பயத் துடனே எமது வாழ்க்கை கழிகிறது எனத் தெரிவித்தார்.



மாணவனான சஞ்சீவன் கருத்துத் தெரிவிக்கையில், கந்தபுரம் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் நான் ஐந்து கிலோ மீற்றர் நடந்து சென்றே கல்வி கற்று வருகிறேன். பாடசாலை உபகரணங்கள் இல்லாத நிலையிலும் சீருடைகள் கிழிந்த நிலையிலும் தான் எனது கல்விப் பயணம் தொடர்கிறது. பாடசாலை செல்வதற்கு வசதிகள் ஏற்படுத்தித் தரும் பட்சத்தில் என்னால் சாதிக்க முடியும். இந்தக் காட்டுப் பகுதியில் இருப்பதற்கே பயமாக இருக்கிறது எங்களுக்கு வீடு இல்லாத காரணத்தால் வேறு வழியில்லாமல் இருக்கிறோம் எனத் தெரிவித்தான்.

இராமையா சமந்தநாயகி ஆகிய நான் முல்லைத்தீவிலிருந்து இடம் பெயர்ந்து கொழும்பு சென்று பின் அங்கிருந்து வவுனியா வந்து உறவினர் வீடுகளில் தங்கியிருந்து, இருக்க இடம் இல்லாத காரணத்தினால் கள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் கடந்த 9 மாதங்களாக இருந்து வருகிறேன்.

அரசாங்க அதிகாரிகளிடம் எங்கள் பிரச்சினைகளை முன்வைத்த போது, அதற்கான தீர்வு எங்களுக்கு கிடைக்கவில்லை. மீள் குடியேறிய மக்களுக்கு அரசிடமிருந்து பல உதவித் திட்டங்கள் கிடைக்கப் பெறுவதாக அறிவிக்கப்படுகின்ற போதிலும் எங்களுக்கு எந்த விதமான உதவித் திட்டங்களும் வழங்கப்படவில்லை. வவுனியா பிரதேச செயலகத்திற்கு சென்று எங்கள் நிலையை எடுத்துக் கூறிய போதும், நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. குழந்தைகளுடன் காட்டுப் பகுதியில் வாழ்ந்து வருகிறோம். மின்சார வசதிகள் இல்லை. காட்டு யானைகளின் வருகை எங்களுக்குப் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படை வசதிகளோ வாழ்வாதார வசதிகளோ இல்லாத நிலையில் மழைக் காலத்தை எதிர்நோக்கியிருக்கிறோம்.

வீட்டை கட்டுவதற்கு தகரமோ அல்லது கிடுகு போன்ற உதவிகளை பிரதேச செயலகத்திடம் கோரியிருந்தோம் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் கொட்டில் அமைக்கப்படாத குடும்பங்கள் இருக்கின்றன. கொட்டில் அமைக்கத் தடிகளை வெட்டி வீடு அமைத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் காட்டு யானைகள் வந்து கொட்டிலை உடைத்து விட்டு சென்று விடுகின்றன. எனக் கண்ணீரோடு தெரிவித்தார்.

நிரோசன் தமிழ்நிலா ஆகிய நான் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து உறவினர் வீட்டில் வசித்து வந்த நிலையில் திருமணம் செய்து நான்கு மாத கைக்குழந்தையுடன் வீடில்லாத நிலையில் கள்ளிக்குளம் காட்டுப் பிரதேசத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் கூலிவேலை செய்து வரும் நிலையில் அவர் வேலைக்குப் போனபின் நான் குழந்தையுடன் தனியாகவே இந்தக் காட்டுப் பகுதியில் இருக்க வேண்டிய சூழ்நிலை இருக் கிறது. எனது கணவர் வேலைக்குச் செல்லாத விடத்துக் குழந்தைகளின் செலவு, வீட்டுச் செலவுகளை எதிர் கொள்ள முடியாமல் தவித்து வருகிறோம்.



இந்த நிலையில் காடுகளை வெட்டி நாங்களே வீடு அமைத்து இருப்பது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. எங்கள் எதிர் காலத்தை நினைக்கும் போது பயமாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# கிழக்கின் பாதுகாப்பானது வடகிழக்கு இணைப்பிலேயே தங்கியுள்ளது



**சுரேஷ் தர்மலிங்கம்**

**"எங்களைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். கிழக்கின் பாதுகாப்பானது இந்த இணைப்பிலே தான் தங்கியுள்ளது. அது இணைக்கப்பட்டு எங்களுக்கான தேச அங்கீகாரம் கிடைக்கப் பெறும் வரை நாங்கள் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் திரு. சுரேஷ் தர்மலிங்கம் அவர்கள் இலக்குடனான நேர்காணலில் தெரிவித்தார், கட்சி தொடர்பான விடயங்கள், சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் அவர் செவ்வியின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.**

**கேள்வி:-**

***தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை கொள்கைகளாக எவற்றினை நீங்கள் முன்னிறுத்துகின்றீர்கள்?***

**பதில்:-**

நாங்கள் ஒரு நாடு இரண்டு தேசம் என்ற அடிப்படையில் கொள்கையை முன்வைத்து பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான ஒரு நிலை நீடிக்கப்பட வேண்டுமானால், தமிழ் மக்களுடைய தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன் இணைந்து அவர்களின் இறைமையும் அங்கீகரிக்கப்பட்டால் மாத்திரமே தமிழ் மக்கள் நிம்மதியாக இலங்கைத் தீவில் சிங்கள மக்கள் போன்றும் முஸ்லிம் மக்கள் போன்றும் சமூகத்தில் வாழக்கூடிய சூழல் உருவாகும்.

அந்த வகையில் தமிழ் மக்களின் தீர்வாக எமது விடுதலைப் போராட்டத் தலைமையானது பேச்சுவார்த்தை மேசையில் முன்வைத்த தேச அங்கீகாரம் என்ற விடயம் பிரதானமானது. அந்த அடிப்படையில் தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் எங்களுடைய கொள்கையாக கொண்டிருக்கின்றோம்.

பிள்ளையான், கருணா போன்ற பல கட்சிகள் கிழக்கினை பிரித்தாளும் நோக்குடன் பல்வேறு விதமான கருத்துகளை மக்கள் மத்தியில் முன்வைத்து வருகின்றனர்.

எங்களைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும். கிழக்கின் பாதுகாப்பானது இந்த இணைப்பிலேதான் தங்கியுள்ளது. அது இணைக்கப்பட்டு எங்களுக்கான தேச அங்கீகாரம் கிடைக்கப் பெறும் வரை நாங்கள் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம்.

**கேள்வி:-**

***மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் உங்கள் கட்சியின் வளர்ச்சிப் போக்கு எவ்வாறு உள்ளது?***

பதில்:-

எங்களது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பொறுத்த மட்டில் கடந்த பத்து வருடமாக கிழக்கு மாகாணத்தில் நாங்கள் தனியாக நின்று பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் சவால்களுக்கு மத்தியிலும் பலரின் உதவியோடு கட்சியைக் கட்டியெழுப்பி வந்துள்ளோம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடு என்பது ஒரு வீச்சாக மாறியிருக்கின்றது. நாங்கள் கொள்கையில் உறுதியான ஒரு தரப்பு என்ற ஒரு எண்ணம் மக்களிடம் காணப்படுகிறது.

தற்போது நாங்கள் பலமாக இருக்கின்றோம். அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், புத்திஜீவிகள், மாணவர்ககள், சிவில் அமைப்புகள் என பல்வேறு அமைப்பினரும் எங்களை சந்தித்து பேசி வருகின்றனர்.

**கேள்வி:-**

***மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வாறான பணிகளை நீங்கள் முன்னெடுத்து வருகின்றீர்கள்?***

பதில்:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மையமாக வைத்தே நாம் வேலைகளை செய்து வருகின்றேம். குறிப்பாக முன்னாள் போராளிகள், விதவைகள், போரில் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்கண்டு அவர்களுக்கான வசதி வாய்ப்புகளையும் வாழ்வாதாரத் திட்டங்களையும் நாங்கள் செய்து வருகின்றோம்.

திடீரென ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தங்கள் போன்ற தருணங்களில் புலம்பெயர் மக்களிடமிருந்து உதவிகளைப் பெற்று பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக சென்று கடந்த காலங்களில் உதவிகளை செய்திருக்கின்றோம்.

கல்வித்துறையை நாங்கள் வளர்த்தெடுக்க வேண்டும். இனி எமது மக்களுக்கு இருக்கின்ற ஒரே ஆயுதம் கல்வியாகும். கல்வித் துறையை முன்னேற்றும் விதமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோப்பாவெளி, புல்லுமலை, வாகரை, வாகனேரி, கட்டுமுறிவு போன்ற பின்தங்கிய எல்லைக் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்வி நிலையங்களை அமைத்து அவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி கற்றல் நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகின்றோம்.

எதிர்கால சந்ததியினர் நன்கு கற்று நல்வழிப்பட வேண்டும் என்பது தொடர்பில் புலம்பெயர் சமூகத்தினர் எம்முடன் பேசுவார்கள். அவ்வாறே அவர்களின் செயற்பாடும் அமைந்திருக்கின்றது. புலம்பெயர் தமிழ் மக்கள் எம்மூடாக பல வழிகளில் இங்கு உதவி வருவது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

**கேள்வி:-**

***மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் பொதுவான விடயங்களில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றும் சூழ்நிலையிருக்கின்றதா? அவ்வாறு இல்லாது விட்டால் அதற்கான காரணம் என்ன?***

பதில்:-

நாங்கள் எமது கொள்கையில் உறுதியாகவுள்ள கட்சி. அந்த அடிப்படையிலேயே நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்தும் பிரிந்து வந்தோம். கிழக்கில் பல கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் தமிழ் மக்களின் நலன் கருதியோ தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கும் வகையிலேயோ அவர்களின் கொள்கைகள் இல்லை.

எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய, தமிழ் தேசம் அங்கீகரிக்கும் விதமாக செயற்படும் கட்சிகளுடனேயே நாங்கள் பயணிப்பது என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

அந்த வகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்று கொள்கையுடன் பயணிக்கும் கட்சி கிழக்கில் இல்லையென்பதே உண்மை.

**கேள்வி:-**

***எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன?***

பதில்:-

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக, நீதிக்காக வேண்டி எந்த தரப்புக்கு வாக்களித்தார்களோ அந்தத் தரப்பு கடந்த பத்து வருடங்காக அவர்களை ஏமாற்றி வந்திருக்கிறது.



தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றும் தரப்புடன் இருக்கப் போகின்றீர்களா, தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் தொடர்ச்சியாக குரல் கொடுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற மக்கள் இயக்கங்களை ஆதரிக்கப் போகின்றீர்களா என்பது உங்கள் கைகளில் தான் உள்ளது.

தமிழ் மக்கள் எதற்காக வாக்களித்தார்களோ அந்த இலட்சியத்தினை அடையாமல், அதில் ஒரு துளி முன்னேற்றம் கூட அடையாமல் தமிழ்

**தொடர்ச்சி 08ம் பக்கம்**

# தமிழ் கட்சிளை ஒருங்கிணைப்பது சாத்தியமில்லை



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எட்வேட் பபிலராஜ்

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு, காணாமல் போனோர் விவகாரம், சிறீலங்கா அரச தலைவர் கோத்தபயா ராஜபக்ஸவின் அறிவிப்பு, தற்போதைய நாட்டு நிலைமைகள் என்பன தொடர்பாக யாழ். பல் கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எட்வேட் பபிலராஜ் அவர்கள் இலக்கு இணைய த்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர் காணல்.**

**கேள்வி:-**

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் எவ்வாறு செயற்பட வேண்டுமென பல்கலைக்கழக சமூகம் எதிர்பார்க்கின்றது?**

**பதில்:-**

நாங்கள் முன்னர் ஆறு தமிழ்க் கட்சிகளையும் ஒருங்கிணைத்து பேசியதை வைத்துப் பார்க்கும் போது, தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவ தென்பது சாத்தியமற்றது. ஏனெனில், ஆசனப் பங் கீடு தொடர்பான விடயங்களில் அவர்கள் உடன் பாட்டிற்கு வரமாட்டார்கள்.

தமிழ்க் கட்சிகள் மூன்று பிரிவாக பிரிந்து நிற்பதைவிட குறைந்தது இரண்டு பிரிவாகவாவது நிற்பது சிறந்தது என எதிர்பார்க்கின்றோம். தமிழர் களுக்கான ஆசனங்கள் குறைவாகவே உள்ளன. எனவே தமிழ்க் கட்சிகள் மூன்றாக பிரிந்து நின்றால், தேசியக் கட்சிகளுக்கு வசதியாக இருக்கும் என்பதால் இரண்டாக நிற்பதைதான் அனைவரும் எதிர்பார்க்கி ன்றார்கள். அப்படியான நிலை உருவாகுமா என்பது கேள்விக்குறியே.

**கேள்வி:-**

**தற்போதைய காலகட்டத்தில் தமிழ்க் கட்சி களை ஒருங்கிணைக்கும் உங்கள் பணி எவ்வாறு இருக்கின்றது?**

**பதில்:-**

தற்போது நாங்கள் இந்த முயற்சியில் ஈடு படவில்லை. ஏனெனில், எங்கள் ஒன்றியத்தின் காலம் முடிவடையும் நேரம் வந்து விட்டது. இனி புதிதாக வரும் ஒன்றியம் தான் இந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி:-**

**காணாமல் போனோர் தொடர்பான போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டுள்ளனர். இதே வேளை காணாமல் போனோர் அனைவரும் இறந்து விட்டார்கள் என அரசாங்கம் கூறியுள்ளது. இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**பதில்:-**

காணாமல் போனோர் இறந்து விட்டார்கள் என்பது காணாமல் போனோரின் உறவினர்களுக்கு பெரும்பாலும் தெரியும். ஆனால் அவர்கள் எவ்வாறு இறந்தார்கள்? மேலும் காணாமல் போனோரின் உறவினர்களுக்கான நியாயமான நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் தான் நாங்கள் அடுத்த கட்டமாக நகர வேண்டிய நிலையில் உள்ளோம்.

அரசாங்கம் இப்போது தான் இந்த அறிவி ப்பை வெளியிட்டுள்ளது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் காணாமல் போனோர் இற ந்து விட்டார்கள் என்றும் அவர்களுக்குரிய நீதி யைப் பெற்றுக் கொள்வதே சரியானது என்பது அவர்களுக்கு முன்னரே தெரிந்திருந்தது.

**கேள்வி:-**

**காணாமல் போனோர் தொடர்பாக சிறீ லங்கா அரசாங்கம் கூறியிருக்கும் பொறுப்பற்ற அறிவித்தல் தொடர்பில் என்ன கருதுகி றீர்கள்?**

**பதில்:-**

அவர்களின் பொறுப்பற்ற பதில் மக்களை ஒரு விரக்தி நிலைக்கே இட்டுச் செல்லும். ஆனால் இன்றைய அரசாங்கம் தாங்கள் எல்லாவற்றிலும் வெளிப்படையாக செயற்படுகின்றோம் என்ற போர் வையில் இவ்வாறு கூறி சில விடயங்களிலிருந்து தாங்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

**கேள்வி:-**

**ஐந்து தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைப்ப தில் உங்களுக்கு சவால்கள் ஏதாவது இருந் ததா?**

**பதில்:-**

இவர்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து பேசு கின்ற போது, பல்வேறு விதமான கருத்து வேறு பாடுகள் இருந்தது. அவர்களை தொட ர்ச்சியாக ஒன்று சேர்ப்பது என்பதே ஒரு சவாலாகவே இருந்தது. ஏனெனில் ஒவ்வொருவரினதும் பாதைகள் வேறு வேறாக இருக்கும் போது அவர்களை ஒரே பாதையில் இணைப்பது என்பது மிகவும் கடினமான ஒரு விடயமாக காணப்பட்டது.

**கேள்வி:-**

**எதிர்வரும் பொதுத் தேர்தலில், புலம் பெயர் சமூகம் மற்றும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தமிழ் மக்க ளின் நலன் களுக்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என பல்கலைக்கழக சமூகம் சார்பாக நினைக்கின்றீர்கள்?**

**பதில்:-**

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களை தமிழ்க் கட்சிகள் முற்றாக நிறை வேற்றியது என்று கூறமுடியாது. இன்றிருக்கும் சூழ்நிலையில் ஆசனங்கள் குறையும் வாய்ப்புக்கள் உள்ளன. அவர்கள் ஆசனங்களுக்காக போட்டியிடும் நிலையில் உள்ளனர். மக்களுக்காக - அவர்களின் உரிமைக்காக அவர்கள் அனைவரும் ஒன்று சேர்வதற் காக, புலம்பெயர் சமூகம் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். சில புலம்பெயர் அமைப்புக்கள் தான் இங்கு இருக்கும் அமைப்புக்களை உடைத்து விட்டதாக கருதப்படும் சூழ்நிலையில், தமிழ்க் கட்சி கள் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்பது தொடர்பாக எங்களிடம் ஒரு விரக்தியான நிலையே காணப்படுகின்றது.

**கேள்வி:-**

**தமிழ் அரசியலிலும், தமிழ் மக்களின் பிரச் சினைகளிலும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு மிகப் பெரியளவில் இருக்கின்றது. புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசின் மூலம் உங்களுக்கு என்ன பாதகமான அல்லது சாதகமான நிலைகள் காணப்படுகின்றது?**

**பதில்:-**

சாதகமான விடயங்கள் இல்லை. ஆனால் பல விடயங்களில் சவால்கள் உள்ளன. இவ்வளவு நாளாக மக்களுக்கான போராட்டங்களில் பங்கு பற்றும் போது எதிர் நோக்கும் சவால்களைவிட தற்போது இன்னும் அதிக சவால்களை எதிர் நோக்க வேண்டிய சூழ்நிலைக்கு முகம்கொடுக் கின்றோம்.

**கேள்வி:-**

**நீங்கள் கட்சிகளை ஒருங்கிணைக்கும் போது இராணுவ புலனாய்வு அமைப்புகளாலோ அல்லது பெயர் குறிப்பிடப்படாத குழுக்களி னாலோ உங்களுக்கோ அல்லது பல்கலைக்கழக சமூகத்திற்கோ ஏதாவது அச்சுறுத்தல்கள் உள்ளதா?**

**பதில்:-**

கட்சிகளை ஒருங்கிணைக்கும் விவகாரத்தில் அப்படியான அச்சுறுத்தல்கள் எதுவும் வரவில்லை.

**கேள்வி:-**

**தற்போதிருக்கும் நிலைமைகள் தொடர் பாக பல்கலைக்கழக மாணவர்கள் சார்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:-**

எங்களை விட மக்கள் தெளிவாக உள்ளனர். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் தேர்தல் வாக்குறுதிகளை நம்பி வாக்களிக்காது, கடந்த கால நிலைமைகளை மனதில் வைத்து வாக்களித்து, பாராளுமன்றத்திற்கு சரியானவர்களை அனுப்ப வேண்டும். யார் யார் தேர்தலில் நிற்பது என்று கட்சி களிடையே முரண்பாடுகள் இருக்கின்றது. எனவே மக்கள் சரியாக உணர்ந்து வாக்களிப்பதே சரியானது.

**கேள்வி:-**

**பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பா லானோர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக வும், வறுமையில் வாழ்பவர்களாகவும் இருக்கின் றனர். தற்போதைய நிலையில் அரசியலுக்கு அப்பால் இவர்களுக்கு என்ன உதவிகள் அல்லது எந்தவிதமான ஊக்குவிப்புகள் தேவை என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

**பதில்:-**

வன்னியிலிருந்து வந்து விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்களில் ஒரு சிலருக்கே போதுமான நிதியுதவி கிடைக்கி ன்றது. பெரும்பாலானவர்களுக்கு நிதியுதவி கிடைப் பதில்லை. இதனால் அவர்கள் கல்வியை தொடர் வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்குகின்றார்கள். நிதி நெருக்கடிகளினால் இரவில் வேலைக்கு சென்று படிக்கும் மாணவர்களும் இருக்கின்றார்கள். பல மாணவர்கள் மதிய உணவிற்கே வசதியில்லாது இரு க்கின்றார்கள். இவ்வாறு பலவகையான இன்னல் களுக்கு முகம் கொடுக்கும் நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

**கேள்வி:-**

**அவர்களின் கல்வியை தொடர அரசியல் பிரமுகர்கள் மற்றும் புலம்பெயர்ந்த மக்களிடையே எவ்வாறான உதவிகளை இவர்களுக்காக எதிர் பார்க்கின்றீர்கள்?**

**பதில்:-**

புலம்பெயர் தேசத்திலுள்ளவர்கள் இவ்வா றான மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான நிதியுதவிகளை வழங்குமிடத்து அவர்கள் கல்வியை தொடர முடியும்.

• • •



# சுமந்திரனின் புதிய திட்டம் குழப்பத்தில் மாவை, சரா!

கொழும்பிலிருந்து **அகிலன்**

**நா**டாளுமன்றம் எப்படியும் இந்தமாத இறுதியில் கலைக்கப்படப்போகின்றது. ஏப்ரல் இறுதிப் பகுதியில் பொதுத் தேர்தல் நடக்கப் போகின்றது. இதில் பெரும்பாலும் மாற்றங் கள் இருக்காது. தேர்தல் வரப்போகிறது என்பது ஏற்கனவே தெரிந்து விட்டதால், தென்னிலங் கையில் உள்ள சிங்களக் கட்சிகளை போல தமிழ் கட்சிகளும் தங்களை பலப்படுத்துவதிலும், கூட் டணி அமைத்துக்கொள்வதிலும் தீவிரமாக இறங்கி யிருக்கின்றனர். இந்தப் பலப்படுத்தும் செயற்பாடு களிலும் கூட்டணிகளை அமைத்துக் கொள்வதி லும் தமிழ்த் தரப்பினரிடையே குழப்பங்களும் குளறுபடிகளும் இடம்பெறுவதை காணக்கூடிய தாக இருக்கிறது. இதில் தமிழ்த் தேசிய கூட்டமை ப்பில் இடம் பெறும் சில குளறுபடிகள் தொடர்பில் இந்த வாரம் பார்க்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இப் போது மூன்று கட்சிகள் தான் இருக்கின்றன தமிழரசுக் கட்சி பிரதானமாக இருக்கின்றது அதனைவிட புளொட், ரெலோ என்பன அதில் அங்கம் வகிக்கின்றன. ரெலோவிலிருந்து ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தலைமையிலான அணி வெளியேறிச் சென்றமை ரெலோவை யாழ் ப்பாணத்தில் சற்று பலவீனப்படுத்தியுள்ளது. கட்சி சார்பில் யாழ்ப்பாணத்தில் யாரை இறக்கு வது என்பதில் உருவாகிய பிரச்சினைக்கு ரெலோ முடிவு காண்டுள்ள போதிலும் கூட, சர்ச்சை கள் தொடர் கதையாத்தான் இருக்கின்றது. கூட் டமைப்புக்குள் இருக்கும் மூன்று பங்காளிக் கட்சிகளின் பிரச்சினை தீர்ந்தாலும் கூட, தமிழரசு க்குள் உருவாகியிருக்கும் புதிய பிரச்சினைதான் சம்பந்தனுக்கு தலையிடியைக் கொடுக்கின்றது.

**தமிழரசுக் கட்சிக்குள் புதியவர்களுக்கு இடம்?**

வடமாகாணத்தில் ஆசனங்கள் எவ்வாறு பங் கேற்பது என்பது தொடர்பில் தமிழ் தேசிய கூட்ட மைப்புக்குள் இணக்கப்பாடு ஏற்கனவே ஏற்பட்டு விட்டது. யாழ்ப்பாணத்தில் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 10 வேட்பாளர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறுத்த வேண்டும். இதில் ரெலோவுக்கு ஒன்று. புளொட்டுக்கு இரண்டு இடங்களையும் கொடுத் திருக்கின்றனர். தமிழரசு கட்சியின் சார்பில் ஏழு பேர் களமிறங்குகின்றார்கள். இந்த ஏழு வேட் பாளர்களும் யார் என்பதில் தான் இப்போது சர்ச்சை உருவாகி இருக்கின்றது. ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு கட்டாயம் ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதே நடை முறையாக இருக்கின்ற போதிலும் கூட, இந்த முறை அதில் மாற்றத்தை செய்ய வேண்டும் என்ற ஒரு கோஷத்தை கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் முன்வைத்திருக்கின்றார்.

இளைஞர்கள், புதிய முகங்கள், மற்றும் பெண்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்ப தால் முதியவர்கள் தேர்தலில் போட்டியிடா மல் ஒதுங்கிக் கொள்வது கட்சியின் எதிர்கால நலன்களுக்கு முக்கியமானது என்ற கருத்தை சுமந்திரன் முன்வைத்திருக்கிறார். இதனடிப்படை யில் மாவை சேனாதிராஜா, உதயன் உரிமை யாளர் சரவணபவன் ஆகியோர் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண் டும் என்ற கோரிக்கை சுமந்திரனால் முன் வைக்கப்படுகின்றது. அவர்களுக்கு பதிலாக இளை யவராக இருக்கின்ற தன்னுடைய ஆதரவாளர்கள் சிலரை வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும் என்பதுதான் சுமந்திரனின் இலக்கு என கூட்டமைப்பு வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாண மேயர் ஆர்னோல்ட், சாவகச்சேரி சயந்தன், வலி வடக்கு சுகிர்தன் உட்பட தன்னுடைய ஆதரவாளர்களான 4 பெயரையாவது களத்தில் இறங்க வேண்டும் என்பது தான் சுமந்திரனின் நோக்கம். அவர்களை வெற்றிபெற வைக்க வேண்டுமானால், மாவை சேனாதிராஜா சரவணபவன் போன்றவர்களை ஒதுக்கிவிட வேண்டும் என அவர் எதிர்பார்க்கின் றார். ஆனால் அந்த இரண்டு பேருமே தாம் போட்டி யிட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின் றார்கள். மாவை சேனாதிராஜா தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றத்துக்கு வரலாமென சுமந்திரன் ஒரு யோசனை தெரிவித்து இருந்தார். ஆனால் சம்பந்தனும் தேசியப் பட்டியல் மூலமாக பாராளுமன்றம் பார்ப்பதிலேயே குறியாக இருப்ப தால் தனக்கு உரிய இடம் கிடைக்குமா என்ற கேள்வி மாவைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அதனால் அவர் அதனை திட்டவட்டமாக மறுத்து விட்டதாக தெரிகின்றது.

**ஒதுங்கிக் கொள்ள மறுக்கும் சரா**

மறுபுறத்தில் சரவணபவனும் ஒதுங்கிக் கொள்வதற்குத் தயாராகவில்லை. சரவணபவனு க்கான ஆதரவு தளம் யாழ்ப்பாணத்தில் பெருமள விற்கு வீழ்ச்சியடைந்து இருப்பதாகவே தெரிகி ன்றது. இருந்த போதிலும் தன்னிடம் இருக் கக் கூடிய பணபலத்தையும் பத்திரிகைப் பலத்தை யும் பயன்படுத்தி மீண்டும் பாராளுமன்ற உறுப் பினராக தன்னால் வரமுடியும் என்ற நம்பி க்கையுடன் சரவணபவன் இருப்பதாக தெரி கின்றது. அதற்காக சுமந்திரனுடன் நேருக்குநேராக மோதுவதற்கும் சரவணபவன் தயாராக இருக்கின் றார். சுமந்திரன் இந்த செயற்பாடுகள் தொடர்பில் மாவை சேனாதிராஜாவிடம் சரவணபவன் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிகிறது. இருந்த போதிலும் இவ்விடயம் தொடர்பில் தன் னால் எதுவுமே செய்ய முடியாது என மாவை தெரிவித்திருக்கின்றார். "என்னுடைய நிலைமை யும் உங்களுடைய நிலைமை போன்று தான் இருக்கின்றது" என மாவை சரவணபவனுக்கு தெரிவித்ததாகவும் ஒரு தகவல் உள்ளது.

இந்த விவகாரம் பெரும்பாலும் சம்பந்த னின் கைகளுக்குப் போகலாம் எனத் தெரிகின்றது. சம்பந்தன், சரவணபவனின் ஒரு உறவினரும் கூட. யாழ்ப்பாணம் செல்லும்போதெல்லாம் சரவணபவனின் இல்லத்தில் அல்லது அவருடைய விடுதியில் தங்குவதே சம்பந்தன் வழமையாக கொண்டிருக்கின்றார். அதனால் சம்பந்தன் மூல மாக தன்னுடைய சீட்டை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் சரவணப வனுக்குஇருப்பதாக தெரிகின்றது.

தமிழரசுக் கட்சிக்குள் தன்னை பலப்படு த்திக் கொள்வதற்கு தனக்கு ஆதரவான இளைஞர் அணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் சுமந்திரன் இறங்கியிருப்பது தமிழரசுக் கட்சியின் பலருக் கும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. சம்பந்தன் வயது காரணமாகவும், உடல் நிலை காரண மாகவும் தீவிரமாகச் செயற்பட முடியாத ஒருவராகி விட்டார். அதேபோல, மாவை சேனாதி ராஜாவும் மருந்து மாத்திரைகளுடன்தான் திரிகி ன்றார். அத்துடன், சிங்களக் கட்சித் தலைவர்கள், இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத் தக் கூடிய ஒரு ஆளுமையைக் கொண்டவராக அவர் இல்லை. அதற்கான ஆளுமை சுமந்திரனி டம்தான் இருக்கின்றது.

தனக்கு சவாலாக வரக்கூடிய ஒருவருமே தமிழரசுக் கட்சிக்குள் இல்லை என்பதை உணர் ந்து கொண்ட ஒருவராகவே சுமந்திரன் செயற்படு கின்றார். வடமாகாண சபைத் தேர்தல் வருமா னால் தனது ஆதரவாளரான ஆர்னோல்டை முதல மைச்சர் வேட்பாளராக களமிறக்குவது சுமந்தி ரனின் திட்டம் எனச் சொல்லப்படுகின்றது. இதனால், மாவையும், சீவி.கே.சிவஞானமும் குழப்பமடைந்திருக்கின்றார்கள். "மாவை அண்ணை பாராளுமன்றம் சென்றால், முதல மைச்சர் வேட்பாளர் நான் தான்" என சீ.வி.கே. அடித்துச் சொல்லி விட்டார். பத்திரிகை அறிக்கை ஒன்றிலேயே அவர் அப்படிக் கூறியிருக்கின்றார்.

ஆக, தமிழரசுக் கட்சிக்குத் தலைமை தாங்க பொருத்தமான ஒரு ஆளுமை இல்லாமையால் சுமந்திரன் அதற்கு வருவதைத் தடுக்க முடியாத ஒரு நிலைமை இருப்பது உண்மை. சிறிதரன் அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற போதிலும், அதற் கான ஆளுமையோ இராஜதந்திரிகளுடன் பேசக் கூடிய ஆற்றலோ அவருக்கு இல்லலாதது தான் மிகப் பெரிய குறைபாடு. ஆக, சுமந்தரனை வீழ்த்த வேண்டும் என தமிழரசுக் கட்சியில் யார் நினைத்தாலும் அது சாத்தியமாகும் என எதிர் பார்க்க முடியாது!

**கிழக்கின் ... தொடர்ச்சி...**

மக்களை அரசியல் ரீதியாக தமிழ் தேசிய கூட்ட மைப்பு அநாதையாக்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலை க்காக ஏராளமான மாவீரர்களை இழந்திருக்கின் றோம். இந்த விடுதலைப் போராட்டத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு இழப்புகளை யும் கொண்ட இலட்சியத்தினை அடைய வேண் டும் என்பதே எமது இலக்காகும். அந்த வழியிலேயே எமது கொள்கையும் கூட அமைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு கொண்டு சென்றதும் அதற்காக குரல் கொடுக்கும் ஒரேயொரு தலைவர் அது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமேயாகும். வட கிழக்கு இணைய வேண்டும் என்பதற்காக அன்று தொடக் கம் இன்று வரை குரல் கொடுத்து வருப வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமேயாகும். கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரையில் சிங்களவர்கள் முஸ்லிம்களை பாவித்து தமிழர் களை முடக்குவதற்கான பல வேலைத் திட்ட ங்களை முன்னெடுத்து வருகின்றனர். நாங்கள் வடக்குடன் சேரும் போது மட்டும் தான் தமிழர் கள் பெரும்பான்மை. எதிர் காலத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிப்பதன் மூலம் மட்டுமே ஏமாற்றமடையாமல் தமிழ் மக்களின் உரிமையினை வெல்ல முடியும்.

• • •



# பிரபாகரன் சட்டகம்:

## விடுதலைப் புலிகளின் உத்திகள்

**பகுதி 2**

ஒரு இயக்கம் தேர்தலில் போட்டியிடுவதால் மட்டுமே அது சனநாயகப் பண்புகள் கொண்ட இயக்கமாகாது. அதுபோல போரிடுவதால் ஒரு அமைப்பு சர்வாதிகார இயக்கமாக ஆவதும் கிடையாது. ஒரு இயக்கம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது, எவ்வாறு அதிகாரம் பகிரப்படுகிறது என்பதே சனநாயகப் பண்புகளைத் தீர்மானிக்கிறது.

6. புலிகள் தேசியச் சிக்கலை ஒரு இராணுவ உத்தி என்று ஒற்றைப் பார்வையில் பார்க்கவில்லை. மாறாக அதனை சமூகப் பண்பாட்டிலிருந்து உலக அரசியல் வரை தொடர்பு கொண்டு ஒரு சிக்கலான அமைப்பாகவே (complex System) பார்த்தனர். அதனால் இரா ணுவ அமைப்பு மட்டும் என்றில்லாமல், பண் பாடு, ஊடகம், மொழி, அரசியல் கட்சிகள், உலகளாவிய தமிழர் அமைப்புகள், பொருளாதாரம், மற்ற நாடுகளுடனான உறவுகள் என அனைத்தையும் கட்டி ஆளும் அளவிற்கு அமைப்புகளை உருவாக்கினார்கள். இவ்வாறு பல்வேறு அமைப்புகளைக் கட்டியெழுப்பி வெற்றிவாய்ப்புகளைப் பெருக்கினார்கள். அடிப்படையில் அவர்கள், ஒரு உத்தி என்றில்லாமல் அனைத்து உத்திகளையும் பயன்படுத்தினார்கள். இதுதான் அவர்கள் கூறாமல் செயல்படுத்திய பெருந் திட்டம்.

அவர்கள் எங்கெங்கெல்லாம் வாய்ப்புகள் கிடை க்கிறதோ, அங்கங்கெல்லாம் உத்திகளைப் பெருக்கினார்கள். அவ்வாறான செயற்பாடு படைத்துறையில் மிக அதிகம். பீரங்கிப்படை, கடற்படை, வான்படை, என்று படைத்துறைக் கட்டுமானங்கள் வளர்ந்து கொண்டே சென்றன. இன்று இருந்தால் அவர்கள் விண்ணையும் கைப்பற்றி இருப்பார்கள்.

அவர்களின் பெருந்திட்டம் என்பது தொடர் ந்து கற்று, புதுப்புது அமைப்புகளைக் கட்ட மைத்து வெற்றி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்டே செல்வதுதான். அதை படைத்துறை என்றில்லாமல் அனைத்து துறைகளிலும் செய்தார்கள், ஈழத்திலிருந்து உலகம் வரை உருவாக்கினார்கள். இவை எல்லாம் சாத்தியமானதற்கு முக்கிய காரணம், அவர்கள் தங்களை குழுக்களின் குழுவாகக் கட்டமைத்ததே. ஒரு தலைவர் திட்டமிட்டு அனைத்தையும் சர்வாதிகார முறையில் உருவாக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியாத காரியம்.

7. அவர்கள் எதிரும் புதிருமான உத்திகளைத் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். ஆயுதப் போராட்டம் செய்தாலும், திலீபன் உண்ணா விரதம் இருந்த அமைதிப் போராட்டமும் நடந்தது. அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒரே குறிக்கோளை நோக்கி பயணித்தனர். ஆயுதப் போராட்டம் என்பதால், அவர்கள் அரசியலை நிராகரிக்கவில்லை. அரசியல் அமைப்புகளையும் வெற்றிக்குத் தேவையான கருவிகளாகப் பார்த்தனர். எப்பொழுது அரசியல் கட்சிகள் ஒரே குறிக்கோளில் இணைந்து பயணிக்கவில்லையோ, அப்பொழுதே முறுகல் நிலை ஏற்பட்டது. அடிப்படையில் அவர்கள் அனைத்து உத்திகளையும் சூழலுக்குத் தகுந்து பயன்படுத்தினர். ஆனால் குறிக்கோளில் எந்த மாற்றமும் இருக்காது.

8. அவர்கள் அதிவேகமாக அமைப்புகளை உருவாக்கி, சோதனைகள் செய்து கற்று அதிவேகமாக வளர்ந்தார்கள். ஒற்றைத் துப்பாக்கியில் ஆரம்பித்த இயக்கம் வான்படை வரை

**சேது ராமலிங்கம்**



வளர்வது கற்றல் இல்லாமல் சாத்தியமில்லை.

9. புலிகள் இயக்கம் மீளெழும்பும் (Resilient) இயக்கம், உடையக்கூடிய (fragile) இயக்கம் அல்ல. காலப் போக்கில் எத்தனையோ மிகச்சிறந்த தளபதிகளை இழந்தாலும், புலிகள் இயக்கம் சரியவில்லை. மேலும் அதிகமாக புதிய தளபதிகள் வளர்த்தெடுக்கப்பட்டு, இயக்கம் முன்னேறிச் சென்றது. பிரபாகரன் இல்லாவிட்டாலும் அவ்வியக்கம் தொடர்ந்திருக்கும் என்று ஆய்வாளர் தராகி சிவராம் குறிப்பிட்டுள்ளார். இது ஏனென்றால் குறிக்கோளை அனைவரும் ஏற்றுக் கொண்டு இறுக்கமான நம்பிக்கையுடன் ஒரு பண்பாட்டின் மூலம் செயற்படுவார்கள். தலைவர் குறிக்கோளை மாற்ற வேண்டும் என்று நினைத்தாலும், குழுக்கள் விடமாட்டார்கள். அவ்வாறான தலைவரை நம்பிக்கைத் துரோகியாகவே பார்த்து தலைமையை மாற்றி விடுவார்கள். குழுக்களின் குழுவில் பிரபாகரன் போன்று "குறிக்கோளிலிருந்து நான் விலகினால் என்னை சுட்டு விடுங்கள்" என்று கூறுபவர் தான் தலைவராகவே இருக்க முடியும். தலைவர் என்பவர் அவ்வாறான குழுக்களை உருவாக்கத்தான் தேவை. அதன் பின்பு அது தனக்கென்று ஒரு உயிர் பெற்று விடும். அதை எந்த ஒரு தனி ஒருவனாலும் திசைமாற்ற முடியாது. நமது உடலில் காயம் பட்டால் எவ்வாறு உடல் சரிசெய்து கொள்கிறதோ, அது போல ஏற்படும் பிழைகளை, இழப்புகளை அதுவே சரிசெய்து கொள்ளும். குறிக்கோளை விடாப்பிடியாக நிற்காமல் துரத்தும்.

**பொருளாதார உத்திகள்**

10. புலிகள் இயக்கத்திற்கான பொருளாதாரம் என்பது மக்களிடமிருந்தும் தங்களது செயற்பாடுகளில் இருந்தும் மட்டுமே வந்தது. பொருளாதாரத்திற்கு என்று உலகளாவிய அமைப்புகளைக் கட்டி எழுப்பினார்கள். அந்நிய உதவிகள் என்பது இலவசமல்ல, அவர்களின் கட்டளைகளை கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதால் இயக்கத்தின் பொருளாதாரம் என்பது வெளியார் யாரையும் நம்பி கட்டமைக்கப்படவில்லை.

11. இருக்கும் பொருளாதாரத்தை மிகச் சிக்கனமாகப் (efficient) பயன்படுத்தினர். பல்வேறு ஆயுதங்களை தாங்களே உற்பத்தியும் செய்தார்கள். உதாரணமாக சிறிய விமானங்களை வாங்கி போர் விமானங்களாக மாற்றினார்கள்.

12. எதிரியின் ஆற்றலை வீணடித்தனர் உறிஞ்சினர். பல ஆயுததளபாடங்கள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டன. சிறு படைகளைக் கொண்டு பெரு நட்டத்தை எதிரிக்கு உருவாக்குவதில் அவர்கள் கைதேந்தவர்கள். சிறிலங்காவின் பொருளாதாரத்தை சிதைத்தார்கள்.

**அறிவுசார் உத்திகள்:**

13. அவர்கள் போர் உத்திகளில் மட்டுமில்லாமல், அமைப்புகளைக் கட்டமைக்கும் முறைகளிலும் உலகில் முன்னோடியாக இருந்தார்கள். அவர்கள்தான் முதன் முதலில் குழுக்களின் குழு முறையில் செயற்பட்டு மாபெரும் வெற்றிகளைப் பெற்றவர்கள். அவ்வாறில்லாமல், இந்தியப் படைகளையும் உலக இராணுவங்கள் பயிற்சியளித்த சிறிலங்கா படைகளையும் பலமுறை தோற்கடித்தது சாத்தியப்பட்டிருக்காது. அவர்களின் அறிவு கற்றலின் மூலமும், அனுபவங்களின் மூலமும் படிப்படியாக பரிணமித்து வந்தவை.

14. போரில் எதிரியின் நிலைகளைப் பற்றிய அறிவு உளவு மூலம் வருவதால், மிகச்சிறந்த உளவுப்படையைக் கட்டமைத்தார்கள். அதே நேரம் தங்களின் நிலைகளைப் பற்றி இரகசியம் காத்தார்கள்.

மொத்தத்தில் புலிகள் சிறிலங்காவைவிட அறிவிலும், ஆற்றலிலும், வேறுபட்ட உத்திகளிலும் உயர்ந்திருந்தனர். போர் உத்திகளிலும் அமைப்பு முறைகளிலும் உலகிற்கே முன்னோடியாக இருந்தனர். மாறாக சிறி லங்கா காலாவதியான போர் உத்திகளைப் பயன்படுத்தினார்கள். அவர்களின் பொருளாதாரத்தை புலிகள் கடுமையாக சேதப்படுத்தினர், பொருளாதாரம் ஒற்றைக் காலில் உலகநாடுகள் அளித்த கடன் களில் நொண்டிக் கொண்டிருந்தது. இதன் விளைவாக மூன்றாம் ஈழப்போரில் உலகம் வியக்கும் சாதனைகளைப் படைத்தனர். அப்படி இருந்தும்

**தொடர்ச்சி 11ம் பக்கம்**

# அவுஸ்திரேலியாவின் தேசிய நாள்

## பூர்வகுடிகளுக்கு படையெடுப்பு நாள்




"நாம் அழிந்து போவோம் என்று அவுஸ்திரேலியா எண்ணியது". நாம் இன்றைய நாளில் (ஜனவரி 26) மறுமலர்ச்சி பெறும் பூர்வகுடிகள்.

அல்ஜசீரா ஊடகத்தின் தொகுப்பாளர்களில் ஒருவரான ஸ்ரான் கிராண்ட் (Stand Grant) குடும்பம் பூர்வகுடிகளின் மொழி, கலாச்சார மறுமலர்ச்சியில் முன்னணியில் நிற்பவர்கள். இங்கு அவர் தனது கதையை சொல்கிறார்.

வேற்று மொழி ஒன்றை பேசியே நான் வளர்ந்தேன்.

200 ஆண்டுகளுக்கு முன் குற்றவாளிகளை கொண்டு வந்த கப்பல்களில் அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு வரப்பட்ட மொழி அது. எனது முன்னோர்கள் அவர்களின் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட போது, அவர்கள் மேல் திணிக்கப்பட்ட மொழி.

1830இல், மேல்மத்திய நியூசவுத் வேல்சின் விராஜூவரி (Wiradjuri) பகுதியை சேர்ந்த எனது மக்கள் மேல் இராணுவ சட்டம் போடப்பட்டது. எனது மக்களை கண்டதும் சுடும் சட்டம் இது. பிரித்தானிய வந்தேறிகள் கூட்டமாக வேட்டைக்கு சென்று விராஜூவரி மக்களை சுற்றி வளைப்பார்கள்.



இந்த வேட்டையில் இருந்து தப்பியவர்களை இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களிலோ அல்லது கிறிஸ்தவ மதபோதகர்களிடமோ தள்ளிவிட்டார்கள். அவர்கள் தங்கள் மொழியை பேசுவதோ, தங்கள் கலாசாரத்தை பின்பற்றுவதோ, தங்கள் சடங்குகளை நடத்து வதோ தடை செய்யப்பட்டது. எனது மக்களும் அவர்கள் பேசிய மொழியை போலவே அழிந்தொழிந்து போவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

"பூர்வகுடிகள்" அழிந்து கொண்டிருக்கும் ஒரு இனமாகவே கருதப்பட்டது. அழிந்து கொண்டிருக்கும் இனத்தின் அடையாளங்களை அழித்து விடுவது பற்றி வந்தேறிகள் பேசினார்கள்.

1901இல் அவுஸ்திரேலியா ஒரு நாடாகிய போது, அதை நிறுவியவர்களுள் ஒருவரான அல்பிரட் டீக்கின் "நூறு ஆண்டுகளுக்குள் அவுஸ்திரேலியா வெள்ளையர் மட்டுமே உள்ள நாடாகி விடும். கறுப்பு தோலுள்ளவர்கள் இங்கு இல்லாமல் போய் விடுவார்கள். தெற்கில் பூர்வகுடி இனம் அழிந்து விட்டது. ஏனைய இடங்களிலும் அழிந்து கொண்டு வருகிறது." என்று எதிர்வு கூறினார்.

பூர்வகுடி பாதுகாப்பு குழு ஒன்று நிறுவப்பட்டது. பூர்வகுடிகள் வாழ்க்கையில் இதன் அதிகாரம் பயங்கரமானது. எனது குடும்பம் எங்கு வாழவேண்டும், யாரை திருமணம் செய்ய வேண்டும், எங்கள் குழந்தைகளை நாமே வளர்த்தெடுக்கலாமா போன்ற விடயங்களை தீர்மானிக்கும் அதிகாரம் இக்குழுவுக்கு இருந்தது.

### வெள்ளையராக சிந்தி, வெள்ளையராக நட, வெள்ளையரன இரு

20ஆம் நூற்றாண்டுகள் முழுவதும் ஒரு இனவாத விஞ்ஞானம் பூர்வகுடி மக்கள் மேல் திணிக்கப்பட்டது.

தன்மயமாக்கல் (assimilation) என்றவொரு கொள்கை பூர்வகுடி மக்களை இல்லாதொழிக்கும் முயற்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. "காமன் வெல்த் உடன் தன்மயமாக்கப்படல்" என்ற கொள்கையாக இது பிரகடனப்படுத்தப்பட்டது.

இக்கொள்கையை எடுத்துக் காட்டும் சுவரொட்டியில் ஒரு கறுப்பு தோலுள்ள தாயின் மகள் பழுப்புநிற தோலுள்ளவராகவும் அவருடைய பேரன் நீலநிற கண்ணுடனும் பொன்னிற மயிருடனும் காட்டப்படுகிறார். மூன்று சந்ததிகளில் கறுப்பிலிருந்து வெள்ளையாக. கலப்பின பழுப்புநிற பிள்ளைகள், அவர்களுடைய கலாச் சாரம் மற்றும் குடும்ப உறவுகளை பிரிக்கும் நோக்குடன், அவர்களுடைய குடும்பங்களிடமிருந்து பறிக்கப்பட்டன. எனக்கு தெரிந்த ஒவ்வொரு பூர்வகுடியினரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதையே 'திருடப்பட்ட சந்ததி' என்று இன்று நாம் அழைக்கிறோம்.



எனது அம்மம்மாவின் சகோதரி அவருடைய பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு பூர்வகுடி சிறுமிகளுக்கான ஒரு தங்கும் விடுதியில் தங்க வைக்கப்பட்டார். அங்கு அவர்களுக்கு வெள்ளையர் குடும்பங்களில் வீட்டு வேலைகள் செய்வதற்கு பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. இச்சிறுமிகள் வெள்ளையர்களை திருமணம் செய்து வெள்ளைத் தோல் பிள்ளைகளை பெற்றெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அவர் தூங்கிய இடத்திற்கு மேலாக "வெள்ளையராக சிந்தி, வெள்ளையராக செயற்படு, வெள்ளையராக இரு" என்று எழுதப்பட்டிருந்தது.

இத்துணை அழிவுகளுக்கு பின்னரும் நாங்கள் அழிந்து போகவில்லை. நகரங்களின் எல்லைகளில் பூர்வகுடிகள் ஒன்று கூடினார்கள். அங்கு முடிவில்லா ஏழ்மையிலும் புறக்கணிப்பு மத்தியிலும் வாழ்ந்தார்கள்.

நாங்கள் அழிந்து போகவில்லை. ஆனால் எங்கள் மொழி அழிந்து போனது. 1963இல் நான் பிறந்த போது நாங்கள் ஆங்கிலம் பேசினோம். இடையிடையே பழைய மொழியின் சில சொற்களை மட்டும் சேர்த்துக் கொண்டோம்.

பிரித்தானியா அவுஸ்திரேலியா மேல் படையெடுத்த போது, இங்கு 250 தனித்துவமான மொழிகள் பேசப்பட்டன. 800இற்கு அதிகமான பேச்சு வழக்குகள் இருந்தன. அவற்றில் அதிக மானவை அமைதியாகி விட்டன. மிஞ்சி இருப்பவற்றில் 90 வீதமானவை அழிவின் விளிம்பில் இருக்கின்றன.

தமிழில் ந.மாலதி

### மொழியின் இளம் துளிர்கள்

பூர்வகுடிகள் அவ்வளவு இலகுவாக சரணடையமாட்டார்கள். இன்று அவுஸ்திரேலியா என்று அழைக்கப்படும் இந்த நிலத்தில், ஐரோப்பியர்கள் வருவதற்கு முன்னர், எனது முன்னோர்கள் 65,000 ஆண்டு கள் செழிப்பாக வாழ்ந்தார்கள்.

42,000 ஆண்டுகள் பழமையான ஒரு மனித எலும்புக்கூடு இங்கு இறந்தவர்களை சடங்குடன் அடக்கம் செய்ததற்கான மிகப்பழைய ஆதாரமாக கருதப்படுகிறது.

உலகத்திலேயே தொடர்ச்சியாக பண்பாட்டுடன் வாழ்ந்த மிகவும் பழமையான மக்களாக நாம் உள்ளோம்.


மொழியின் இளம் துளிர்கள் எட்டிப் பார்க்கின்றன. கலாச்சார, ஆன்மீக மறுமலர்ச்சியின் ஒரு அங்கமே இது. இந்நிலத்தின் முதல் மக்களின் சந்ததியினர் அவர்களுடைய பழமையான மொழியை மீண்டும் பேசுகிறார்கள். இம்மறுமலர்ச்சியின் முன்னணியில் எனது தந்தையும் இருந்தார்.

அவர் சிறுவனாக இருந்த போது அவருடைய பாட்டன் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டதை அவர் கண்டார். எனது தந்தையின் பாட்டன் எனது தந்தையுடன் எனது ஊரின் தெருவில் விராஜூவரி மொழியில் பேசியதற்காகவே சிறையில் அடைத்தார்கள்.

50 ஆண்டுகளின் பின் எனது தந்தை அவரது மொழியை பாதுகாத்ததற்காக அவுஸ்திரேலிய அரசால் கௌரவிக்கப்பட்டார். எத்துணை அதிசயமான ஒரு பயணம்.

### என் வாழ்க்கையில் மிகப் பெரிய கௌரவமாக நான் கருதுவது

எனது தந்தை கடினமான வாழ்க்கையை வாழ்ந்தார். கறுப்பு தோலுடன் இருப்பதே குற்றமாக கருதக் கூடிய நாட்டில் ஒரு கறுப்பு தோல் மனிதராக. அவருக்கு முழுமையான கல்வி மறுக்கப்பட்டது. என்னையும் எனது பல சகோதர சகோதரிகளையும் தனது கைகளின் பலத்தைக் கொண்டே வளர்த்தார்.




ஏராளமான பூர்வகுடி ஆண்களைப் போலவே அவரும் காவல்துறையால் கொடுமையாக நடத்தப்பட்டார். இருந்தும் அவர் ஒருபோதும் தான் யார் என்பதை மறக்கவில்லை. அவருக்கிருந்த நம்பிக்கையை இழக்கவில்லை. அவருடைய பாட்டனின் நினைவுகளையும் அவரின் அன்பையும் எனது தந்தை இழந்து விடவில்லை.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## பிரபாகரன் ... தொடர்ச்சி..

ஏன் 2009இல் பின்னடைவு ஏற்பட்டது என்று கேள்வி எழும். புலிகள் சிறிலங்காவை எப்பொழுதோ தோற்கடித்து விட்டனர். அவர்கள் 2009இல் பின்னடைவை சந்தித்தது உலகத்திடம், சிறிலங்காவிடம் அல்ல. 2001ஆம் ஆண்டு இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின் உலகில் அனைத்து போராடும் குழுக்களுக்கும் எதிரான நிலை ஏற்பட்டது. புலிகளின் பொருளாதாரம் முடக்கப்பட்டது, ஆயுத வரவு முடக்கப்பட்டது, காட்டிக் கொடுக்கப்பட்டது; ஆனால் அதே நேரம் சிறிலங்காவிற்கு பல கோடிகள் கடன் அளிக்கப்பட்டது, ஆயுதங்கள் கொட்டப்பட்டது, புலிகளுக்கு எதிரான புதிய போர் வியூகங்களை உலக இராணுவங்கள் கற்பித்தன, பல உலகத்தமிழர் அமைப்புகள் தடை செய்யப்பட்டன, உலக ஆதரவு சிறிலங்காவின் பக்கம் சென்றது. இவை போன்று அனைத்தையும் புலிகளுக்கு எதிராக உலகம் செய்தது. இந்த நிலைமையில் யார்தான் போரிட முடியும்? இத்தனைக்கும் 2001இல் நடந்த நிகழ்வுக்கும் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது ஒரு பூலோக அரசியல் சுனாமி, அனைத்து தேசிய போராட்டங்களையும் தாக்கியது. இது போன்ற முற்றிலும் எதிர்பாராத நிகழ்வுகளுக்கு எப்படி திட்டமிட முடியும்? புலிகளுக்கு 2009இல் பின்னடைவு ஏற்பட்டாலும் புலிகள் மீண்டெழுந்திருப்பார்கள், ஆனால் புலிப் பண்பாடு இல்லாதபடி குழுக்களின் குழு ஈழத்தில் முற்றிலும் அழிக்கப்பட்டது அதனால் தான் அவர்கள் மீளெழ முடியாமல் போனது.

புலிகளை அழிப்பது அவ்வளவு எளிதானது அல்ல. அது இந்தியாவாலோ சிங்களத்தாலோ முடியாத காரியம். புலிகள் எதிரிகளை விட மிகச் சிக்கலான அமைப்பு. ஒரு உலக வலைப் பின்னலை உடைக்க இன்னொரு உலக வலைப் பின்னலால் மட்டுமே முடியும். முடிவில் ஒரு பெரிய உலக நாடுகளின் கூட்டு சதியால் உருவாக்கிய வலைப் பின்னலே புலிகளை அழித்தது.

புலிகளின் ஒட்டுமொத்த பெருந்திட்டத்தில் எந்தப் பிழையும் இல்லை. அதை நடைமுறைப் படுத்துவதில் சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம், அதற்காக அவர்களின் பெருந்திட்டமே தவறு என்பது ஆதாரமற்றது. இவ்வுலகில் நாம் உறுதியாக வெல்வதற்கென்று எந்த திட்டத்தையும் நம்மால் தீட்ட முடியாது. நமது வெற்றி வாய்ப்புகளைக் கூட்டுவதற்கு ஒட்டுமொத்தப் பார்வை கொண்டு பல்வேறு அமைப்புகளை உருவாக்கி பரிணமித்துக் கொண்டே செல்ல வேண்டும். வாய்ப்பு அமையும் பொழுது வெற்றி பெறுவோம். அது எப்பொழுது அமையும், எப்படி அமையும் என்று கணிக்க முடியாது. நாம் எதிர்காலத்தை நம்பிக்கையுடனே அணுக முடியும். புலிகள் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற நம்பிக்கையுடன் அணுகினார்கள். வெற்றி க்கான முழுப் பாதை தெரிந்தால்தான் செயற்படுவேன் என்றால், பிரபாகரன் ஒன்றைத் துப்பாக்கியைத் தூக்கியே இருக்க முடியாது. நாம் முடிந்த அளவு நமது செயற்பாடுகளை அறிவு பூர்வமாக முடுக்கி, நம்பிக்கையுடன் முன்னேற வேண்டும். இது தான் பிரபாகரனின் பெருந் திட்டம்.

**முற்றும்**

## அவுஸ்திரேலியாவின்... தொடர்ச்சி..

அவுஸ்திரேலியாவின் விளிம்பில் வாழ்ந்த இந்த மனிதரை, அவர் வயது 50களில் இருந்த போது, ஜான் ரடர் என்னும் ஒரு வெள்ளையர், ஒரு மொழி யியலாளர், தேடி வந்தார். விராஜூவரி மொழியை காப்பாற்றுவதில் ஜான் ரடருக்கு ஆர்வமிரு ந்தது.




தொடர்ந்த 20 ஆண்டுகளில் இந்த இரு மனிதர்களும் விராஜூவரி மொழியின் முதன் முதலாவது அகராதியை தொகுத்தார்கள். அந்த மொழி யை கற்பிப்பதற்கான மையங்களை விராஜூவரி நிலமெங்கும் திறந்தார்கள். சார்ல்ஸ் ஸ்ருவர்ட் பல்கலைக் கழகத்தில் விராஜூவரி ஆய்வுகளு க்காக ஒரு முதுகலை படிப்பையும் நிறுவினார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் எனது தந்தைக்கு இதே பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்தது.

எனது தந்தையின் பெயர் Stan Grant. அவருடைய பெயர் எனக்கு சூட்டப்பட்டதை எனது வாழ்க்கையின் மிகப்பெரிய கௌரவமாக நான் கருதுகிறேன்.

### நாங்கள் அழியவில்லை இன்றும் இருக்கிறோம்


அவரும் எனது தாயாருமே இன்று நான் நானாக இருப்பதற்கு காரணம். இருவரும் எம்மை தைரியமானவர்களாகவும் தன்மான முள்ளவர்களாகவும் வளர்த்தார்கள். எங்கள் குடும்பத்தை ஒன்றாக வைத்து பாதுகாத்தார்கள். எங்கள் கதைகளை உயிரோட்டத்தோடு பாதுகாத்தார்கள். நான் யாரென்று எனக்கு கற்பித்தார்கள்.

இன்றைய அவுஸ்திரேலிய நாளில் - படையெடுப்பு நாளில் நான் அவர்களை நினைக்கிறேன். எனது குடும்பத்தவர்கள் எல்லேரையும் நினைக்கிறேன். நாங்கள் இன்றும் அழியாமல் உயிரோடு இருப்பதை நினைக்கிறேன்.

அவுஸ்திரேலியா என்ற மாபெரும் பொய்யை வெளிப்படுத்தும் உண்மை நாங்கள். இந்த நிலம் ஆளில்லா நிலமென்று சொல்லி பிரித்தானியா இதை தனது என்று சொந்தம் கொண்டாடியது. இங்கு வாழ்ந்து கொண்டிருந்த மானிடத்தை அவர்கள் காணவில்லை.

நாங்கள் அழிந்து விடுவோம் என்று அவுஸ்திரேலியா நினைத்தது. நாங்கள் கரைந்தொ ழிந்து போவோம் என்று நினைத்தது.

பிரித்தானிய கடலோடியான ஜேம்ஸ் குக் தனது கொடியை இங்கு நாட்டி எமது நிலத்தை தனதென்று கையகப்படுத்தி 250 ஆண்டுகளுக்கு பின்னர் நாங்கள் திரும்ப அவர்களு டன் பேசுகிறோம். எமது சொந்த மொழியில்.



Stan Grant – ஊடகவியலாளர், நூலாசிரியர்,பட இயக்குநர் – அவுஸ்திரேலியாவின் ஆதி தேசிய மக்களான விராஜூவரி (Wiradju-ri), கமில்றோய் (Kami-laroi) மற்றும் டறவல் (Dharawal) இனங்களை சார்ந் தவர்.

**நன்றி அல்ஜசீரா**

• • •

## கள்ளிக்குளம்.... தொடர்ச்சி..

மோகனதாஸ் கிருஸ்டினா ஆகிய நான் யுத்தத்தின் காரணமாக கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவிற்கு வந்து உறவினர் வீடுகளில் தங்கியிருந்த நிலையில் இப்போது கள்ளிக்குளம் கிராமத்தின் காட்டுப் பகுதியில் வசித்து வருகிறோம். இன்னொருவரின் கொட்டிலில் தங்கியிருந்துதான் காடுகளை வெட்டித் துப்புரவாக்கி வீடு அமைக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். நாங்கள் அரச அதிகாரிகளை, எங்களுக்கு இந்தக் காணியை துப்புரவாக்கி தாருங்கள் என்று கேட்டதற்கு, அவர்கள் எங்களை யே துப்புரவாக்க சொல்லிவிட்டார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அலைந்து திரிந்த எங்களுக்கு நிரந்தர வருமானம் இல்லை. எனது கணவர் கூலி வேலையே செய்கிறார். எங்களிடம் பணமில்லை. இரண்டு நாட்கள் கூலி வேலைக்குச் செல்லும் எனது கணவர் இரண்டு நாட்கள் காடு வெட்டுகிறார். எங்கள் குடும்ப வாழ்க்கை கண்ணீரின் மத்தியிலேயே செல்கிறது எனக் கவலையுடன் தெரிவித்தார்.

லோறன்ஸ் சசிதேவியாகிய நான், யுத்தத்தின் காரணமாக கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியாவிற்கு வந்த நிலையில் உறவினர்களின் வீடுகளில் வசித்து வந்த நிலையில் இப்போது கள்ளிக்குளத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் கடந்த 2000ஆம் ஆண்டு வேலைக்குச் சென்ற நிலையில் காணாமல் போய்விட்டார். அதன் பின் எனது ஐந்து குழந்தைகளுடன் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்த எனக்கு அரசினால் எந்தவிதமான உதவித் திட்டங்களும் வழங்கப் படவில்லை.

கணவன் இல்லாத எனக்குச் சமுர்த்தி உதவிகள் கூட வழங்கப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சென்றுகூட எனது நிலைமையைத் தெரிவித்திருந்தேன். அவர்கள் எந்தவிதமான உதவிகளையும் எங்களுக்கு வழங்கவில்லையெனத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் எனது இர ண்டு பிள்ளைகள் மன்னாரில் கிறிஸ்தவ மடத் தில் படித்து வருகிறார்கள். நானும் மூன்று பிள்ளைகளும் கள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் வசித்து வருகிறோம் என தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக உயிரை காப்பாற்ற போராடிய மக்கள் யுத்தம் முடிவடைந்த நிலையிலும் தங்கள் வாழ்க்கைக்கான போராட்டம் முடியவில்லையென விரக்தியோடு தெரிவித்தனர். யுத்த காலத்தில் பயத்துடன் வாழ்ந்ததைப் போலவே இன்றும் இந்த கள்ளிக்குளம் காட்டுப் பகுதியில் எமது குழந்தைகளுடன் தினம் தினம் பயத்துடன் வாழ்ந்து வருகிறோம்.

எமது குழந்தைகளின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது? எனத் தெரியவில்லை என ஏக்கத்தோடு தெரிவிக்கும் அம் மக்கள் எமது வாழ்வாதாரத்துக்கு ஏதும் உதவிகள் கிடைக்காதா? என எதிர்பார்த்திருக்கின்றனர். இவ்வாறு தாயகத்தில் பல கிராமங்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இக் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் இதுவரை அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ முன்வரவில்லை. இவர்களின் நிலையறிந்து வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு புலம்பெயர் உறவுகள் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்பதே இம்மக்களின் பாரிய எதிர்பார்ப்பாக உள்ளது.

• • •

# உலகை கதிகலங்க வைக்கும் புதிய கொரோனா வைரசு


விக்கிரமன்

உயிரின வரலாற்றில் நுண்ணுயிர்கள் பேராதிக்கம் செலுத்தி வருவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. இந் நுண்ணுயிர்கள் தாம் அனைத்து உயிரினங்களின் இருப்பிற்கு ஆதார மாகவும், சிலவேளைகளில் அவ்வுயிர்களின் அழிவுக்கு காரணமாகவும் அமைந்து விடுகின்றன. அந்த வகையில் வைரசுக்களின் அமைப்பும் செய ற்படு திறனும் மனித குலத்தை நீண்ட நெடுங் காலமாக ஆட்டம் காண வைத்து வருவது கண்கூடு.

கடந்த எட்டு நூற்றாண்டுகளில் இரண்டு பில்லியனுக்கும் மேற்பட்ட மனித உயிரிழப்புகள் வைரசுக்களின் தாக்கத்தால் ஏற்பட்டவை என கணக்கிடப்படுகிறது. இவற்றுள், ஸ்பானிய காய்ச்சல், ஈரலழற்சி(செங்கமாரி/hepatitis), சின்ன முத்து(Measles), சின்னம்மை(smallpox), எய்ட்ஸ், பல்வேறு வகையான இன்புஃளுவென்சா (influenza) காய்ச்சல் என்பன கடந்த காலங்களில் சிறு மற்றும் பெரும் எண்ணிக்கைகளில் மனித உயிரிழப்புகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றன.

### கொரோனா வைரசுக்கள்

கொரோனா வைரசுக்கள் 1960களில் கோழிகளில் நோயை ஏற்படுத்திய போது இனங் காணப்பட்டன. கொரோனா வைரசுக் களின் மகுடம்(crown) போன்ற தோற்றம் இப்பெயருக்கான காரணமாக அமைந்தது.



கடந்த காலங்களில் இரு வெவ்வேறு கொரோனா வைரசுக்கள் மனிதரில் சாதாரண சளிக்காய்ச்சலை ஏற்படுத் துவதும் அறியப்பட்டது. எனினும் மனிதர்கள் மீதான புதிய கொரோனா வைரசுகளின் தாக்கம் கடந்த 2003 முதல் அச்சுறுத்தும் வகையில் குறுகிய காலத்துள் பல்வேறு நாடுகளில் தாக்க த்தை ஏற்படுத்தி வருவதுடன் சடுதியான மரணங் களையும் மருத்துவ விஞ்ஞானத்துறைக்கு சவாலா கவும் விளங்கி வருகின்றன. இவற்றுள் துரித கடுஞ் சுவாச நோய் (Severe Acute Respiratory Syndrome /SARS), மத்திய கிழக்கு சுவாச நோய் (Middle East Respiratory Syndromeல்/ MERS) என்பன 2003 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் தாக்கம் செலுத்தத் தொடங்கி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. எனினும் 2019 டிசம்பரில் இனங்காணப்பட்ட புதிய கொரோனா வைரசு ஒரு மாத காலத்தில் 27 நாடுகளுக்கு பரவியுள்ளதுடன் 11,000 இற்கு மேற்பட்டவர்களில் உறுதிப்படுத்தப்பட்டு 250இற்கு மேற்பட்ட உயிர்களை காவு கொண்டு உலகமெங்கும் மக்களின் பேசு பொருளாகி கதி கலங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

### புதிய கொரோனா வைரசின் பரவும் முறையும்நோய்த் தாக்கமும்

புதிய வைரசு ஏனைய கொரோனா வைரசுக்கள் போலவே தோற்றமளித்தாலும் அதன் வெளிப்புறமுள்ள உயிர்க் கலங்களைத் தாக்கும் புரத கூறுகளில் சிறு வேறுபாடுகளைக் கொண்டுள்ளமையே இதனை புதிய வைரசாக இனங்காட்டி நிற்கிறது. இவ் வைரசு தொடர்பான முதற்கட்ட ஆய்வுகள் முன்னர் இனங்காணப்பட்ட SARS மற்றும் MERS கொரோனா வைரசுகளின் அமைப்புடன் ஒத்துப் போகின்ற போதிலும், வௌவ்வால்களில் இருந்து பரவிய SARS வைரசு டன் அதிக தொடர்புடையதாக கருதப்படுகிறது. இவ்வைரசு வௌவ்வால் போன்ற ஏதேனும் விலங்கிலிருந்து, ஏனைய விலங்குகளுக்கும், அவ் விலங்குகளை கையாளும் அல்லது உண்ணும் மனிதருக்கும் பரவியிருக்கக் கூடிய வாய்ப்புக ளையே இதுவரையான நோய் பரம்பலியல் ஆய்வுகள் சுட்டி நிற்கின்றன. இவ்வைரசு விலங் கிலும் மனிதர்களிடையேயும் பரவும். நோய் ஏற்படுத்தும் மற்றும் தாக்கம் உண்டு பண்ணும் முறைகளில் SARS வைரசையே ஒத்ததாக காணப் பட்டாலும், இதன் வீரியம் சற்று அதிகமானதாக இருக்கலாம் என்பது இதன் பரவல் வேகத்தில் இருந்து கணிக்கப்படுகிறது.

புதிய கொரோனா வைரசுக்கள் விலங்கு களின் தொடுகை, விலங்கு உணவுகளை உட் கொள்ளல் என்பவற்றின் மூலமும் தொற்றுக்கு உள்ளானவர்களின் சுவாச துணிக்கைகள் மூலமாக வும் பரவுவதாக இனங்காணப்பட்டுள்ளது. தொற்று ஏற்பட்ட ஓர் மனிதருடனான தொடுகை மற்றும் அவரிடமிருந்து சுமார் 6 அடி சுற்று வட்டத் தினுள்ளான காற்றுத் துணிக்கைகளை சுவாசி த்தல் என்பவற்றின் மூலம் இவ்வைரசுக்கள் இன்னொரு நபரை தொற்றலாம் என அறிய ப்பட்டுள்ளது. இவ்வாறு தொற்றும் வைரசு க்கள் தொற்று ஏற்பட்டவரின் சுவாச குழாய்களி லும் நுரையீரலிலும் பல்கிப் பெருகி நுரை யீரலின் கலங்களைத் தாக்கி அவற்றின் உயிர்வளி (ஒட்சிசன்) பரிமாற்ற திறனை பாதிப்பதன் மூலம் மூச்சுத் திணறலையும் பிற உடல் உறுப்புக் களின் செயற்பாடுகளையும் பாதித்து இறுதி யில் உயிரிழப்பை ஏற்படுத்துகிறது என கண்டறி யப்பட்டுள்ளது.

### நோயின் அறிகுறி

ஏனைய சுவாச தொற்றுக்கள் போலவே இந்நோயும் தடிமன், இருமல், காய்ச்சல், என்பவற் றுடன் ஆரம்பித்து மூச்சுத் திணறல் ஏற்படும் போது தீவிரமடைகிறது.

### புதிய கொரோனா வைரசு நோய் பரம்பல்



புதிய கொரோனா வைரசானது 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி சீனாவின் வுஹான் மாவட்டத்திலிருந்து இனங்காணப்பட்டு உலக சுகாதார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. அன்றி லிருந்து 2020ஆம் ஆண்டு பெப்ருவரி 1ஆம் திகதி வரை 11374 உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 98.7 வீதமானவர்கள் சீனாவிலும் 153 (1.3%) பேர் 26 பிறநாடுகளிலும் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 2.2 வீதத்தினர் இறந்துள்ளனர். பிற நாடுகளில் இனங்காணப்பட்ட அனைவரும் ஏதோ ஒரு வகையில் சீன நோயாளர்கள் அல்லது பயணிகளுடன் தொடர்புபட்டிருந்தமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த நோயின் பரம்பல் வேகத்தையும் நோய்த் தாக்கம் மற்றும் தடுப்பு அல்லது சிகிச்சை முறை ஏற்பாடுகளையும் கருத்தில் கொண்டு இந்நோய் கிட்டத்தட்ட 40,000 பேர் வரை தாக்கத்திற்குள்ளாக்கும் காலத்தினுள் (மார்ச் நடுப்பகுதி) கட்டுப்பாடுக்குக்குள் கொண்டு வர முடியும் என மருத்துவ ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.

இந்த நோய் விரைவாக பரவுவதற்கு புதிய வைரசின் வீரியத்துடன் அதன் தோற்றுவாயாக அமைந்த சீன சனத்தொகை (உலக சனத் தொகை யில் 18.2%), அவர்களின் உலகளாவிய பரம்பல், உலகளாவிய வியாபார மற்றும் சுற்றுலா தொடர்பு கள், தினசரி பயணங்கள் என்பன பிரதான காரண மாக அமைகின்றன.

### நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள்

இந்த நோய்க்கான பிரத்தியேக நோயெதி ர்ப்பு பாயங்களோ, மருந்து வகைகளோ கண்டு பிடிக்கப்படவில்லை. ஏற்கெனவே இருக்கும் வைரசு எதிர்ப்பு மருந்துகள் எதுவும் இந்நோயை கட்டுப்படுத்தும் திறனற்றவையாகவே காணப் படுகின்றன. இந்நிலையில் மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளை குறைத்தல், அவசியமற்ற பயணங்க ளைத் தவிர்த்தல், தனிநபர் சுகாதாரம் பேணல், நோய்த் தவிர்ப்பு பழக்க வழக்கங்களை கிரமமாக கைக்கொள்ளல் என்பவற்றுடன், சிறந்த மருத் துவ பராமரிப்பு முறைகளை நாடுகள், மற்றும் மாவட்டங்கள் தோறும் ஒழுங்கமைப்பு செய் தல் என்பவையே நாம் மேற்கொள்ள வேண் டிய நோய்த் தவிர்ப்பு பொறி முறைகளாக விளங்குகின்றன.

குறிப்பாக நோயாளர்களை எதிர் கொள்ளக் கூடிய பொது இடங்களில் (வைத்தியசாலைகள், விமானங்கள், பொது வாகனங்கள்) முகக் கவசம் (face mask) அணிதல், தேவையற்ற பொது பாவ னைப் பொருட்களின் தொடுகையை தவிர்த் தல். அவ்வாறு தொட நேர்ந்தால் கைகளை சவர்க் காரமும் நீரும் கொண்டு கழுவுதல் அல்லது மது சார சுத்தமாக்கிகள் (Alcohol based sanitizer) கொண்டு சுத்தம் செய்தல் போன்ற செயற்பாடுகள் நோய் தொற்றுவாய்ப்பை குறைக்க உதவும்.

அதேவேளை, புதிய கொரோனா வைரசு தொற்றுக்கு ஆளான ஒருவ ருடன் நெருங்கிய தொடர்பாடலை கொண்டிருந்த



ஒருவரிடம் நோய் அறிகுறிகள் காணப்பட்டால், அவரை உடன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் உரிய நோய் பராமரிப்பு சிகிச்சைகளை வழங்க வேண்டும்.



தொற்றுக்குள்ளானவர்கள் சுவாச தொற்று நோய் பராமரிப்புக்கான தனிப்பட்ட பராமரிப்பு அறைகளில், உயிர்வளி(ஒட்சிசன்) வழங்கிகள், நாளங்களூடான திரவ பாயங்கள் வழங்கும் வசதி, உடல் உறுப்புகளின் செயற்பாடுகளை கண்காணிக்கும் பரிசோதனை வசதிகள் என்பவற்றுடன் பிற தொற்றுக்களுக் கெதிரான தேர்ந்த நுண்ணுயிர் கொல்லிகளை வழங்கும் வசதிகளுடைய பிரதான வைத்தியசாலைகளில் அதிக கவனத்துடன் சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.